மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 7 சுற்றம் : 10 / அக்டோபர் 2019 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-



## சீன அதிபரின் மாமல்லபுரப் பயணம்





## கீழடி

## அகழாய்வு உண்மைகள்



அக் 27
மருதிருவர்
குரு பூஜை விழா
அக் 30
தேவர் ஜெயந்தி விழா
முக்குலம் ஒன்றிணைய வீரமுழக்கமிட்டு அழைக்கிறார்!
வீரத்தமிழன் சேது.கருணாஸ்
எம்.எல்.ஏ.,
தேவரினம் காக்க எழுக!
முக்குலத்தின்
புலிகளே வருக!
முக்குலத்தோர் புலிப்படை

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly September 2019

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
செய்தி ஆசிரியர்
**ம. வில்லியம் எபனேசர்**
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**ஜெயவேல்**
**க. பவானி** எம்.ஏ.,
**ஜான் ஜெயராமன்**
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே.பால்ராஜ்** மதுரை
**அரவிந்த்**
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்
சைதை **சு.மணிமாறன்**
**ஜோ.எஸ்தர்ரோஸ்லின்** பி.இ.,
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**

அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

சீன அதிபரின் மாமல்லபுரப் பயணம் (தலையங்கம்) 4

கைவல்ய சாமியார் எழுதிய கடிதம்
– இருங்கோவேள்........ 5

கண்மாய் கல்குவாரியானது?
– ஜோ.ஜோயல்........9

சங்கத்தமிழில் இறை........ 10

புத்திசாலி திறமைசாலி யார்? ........13

அணு ஆய்விற்கு அடித்தளமிட்ட
ஜான் டால்டன்
– சிதம்பரம் (இயற்பியல் ஆசிரியர் ஓய்வு) ........16

தமிழர் சமயத்தலைவர்களான
நந்தனார் திருப்பாணாழ்வார் வரலாற்றாய்வு
– தமிழர் ஆன்மவியல் அறக்கட்டளை........ 18

காந்திக்கு கன்னியாகுமரியில் நுழைய தடை ........22

ஆந்திர முதல்வரின் அதிரடிகள்
க. பாவனி........ 23

கண்டங்கத்திரி மருத்துவ பயன்கள்
– ஜெயவேல்........ 24

பறவைகளின் அரசன் கழுகு
– முனைவர் வே. ஞானப்பிரகாசம்........ 25

கீழடி அகழாய்வு உண்மைகள்
– சைதை மணிமாறன்........ 27

இலவச வீட்டுமனைப் பட்டா யாருக்கு
வழங்க வேண்டும்........ 31

எல்லை மீறும் இணையதள கருத்துப்பதிவுகள்
– முத்து மீனா எழுத்தாளர்........ 33

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. *– ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.





# சீன அதிபரின் மாமல்லபுரப் பயணம்



ஜிங்பிங், மோடி இருவரும் சந்தித்துப் பேச வேண்டும் என்பதற்காக மாமல்லபுரம் தேர்ந்தெடுக்கப் பட்டது, இது சீனஅதிபரின் அவா என்று கூறப்பட்ட நிலையில், இவர்களது சுற்றுலா இன்பச் சுற்றுலாவாக நடந்து முடிந்திருக்கிறது. ஜிங்பிங் அவர்களை நமது முதல்வர் வானூர்தி நிலையம் சென்று வரவேற்றார். அதன்பிறகு அவருக்கு இந்தச் சுற்றுலாவில் வேறு முக்கியத்துவம் எதுவும் தரப்படவில்லை. அவரோ இடைத்தேர்தலில் கவனம் செலுத்தத் தொடங்கி விட்டார்.

இருபெரும் நாடுகளுடைய தலைவர்கள் எதைப் பேசினார்கள்? என்னென்ன திட்டங்கள் கைச்சாத் திடப் பட்டன? விபரங்கள் காணக் கிடைக்கவில்லை. ஐந்து மணிநேரம் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது என்கிறார்கள். என்ன பேசினார்கள்? மூச்!.

மோடி வேட்டி கட்டியிருந்தார், பரபரப்பான செய்தி, மோடி குப்பைகளைப் பொறுக்கினார் அது ஒரு பரபரப்பான செய்தி. தமிழக அரசால் சுத்தமாக வைக்கப்பட்டிருந்த பகுதியில் மோடிக்காக குப்பை களைப் போட்டு, அவைகளை அவர் நெகிழிப் (பிளாஸ்டிக்) பையில் எடுத்துப் போட்டுக் கொண்டது சிரிப்பாய் சிரித்தது வேறு கதை.

சென்னை மாநகர் வாழ் மக்களும், மாநகரத்திற்கு வருவோரும் போவோரும் இந்தச் சந்திப்பின் கதாநாயகர்களை வசை பாடிச் சென்றதுதான் இந்தச் சுற்றுலாவின் வெற்றியோ என்னவோ தெரியவில்லை. அவர்கள் இங்கிருந்த இரண்டு நாட்களும் பொது மக்கள் பட்ட அவதி சொல்லி மாளாது.

பயணம்தான் முடிந்ததே அதற்குப் பிறகாவது நாட்டு நலன் சார்ந்த அறிவிப்புகளைப் பேசினோம் என்றோ, திட்டங்களுக்கு கையெழுத்திட்டோம் என்றோ எந்தச் செய்தியும் இல்லை.

இவர்களின் வருகை உறுதி செய்யப்பட்டு ஆயத்த வேலைகள் நடந்து கொண்டிருந்த போது, இந்தி தொடர்பாக உள்துறை அமைச்சர் அமித்சா ஏதோ பேச, உடனே வெகுண்டெழுந்தார் நமது எதிர்க்கட்சித் தலைவர். தமிழ்நாட்டின் ஆளுநர் அழைப்பில், ஆளுநர் மாளிகை சென்று திரும்பினார். சினம் எல்லாம் எங்கோ போய் மறைந்து கொள்ள, எந்த விதப் போராட்டமும் நடைபெறாது என்று அறிவித்து அமைதியானார்.

இரண்டு பெரிய நாட்டினுடைய தலைவர்கள் சந்திப்பில் இதுபோன்ற நிகழ்வுகள் தான் நடந்ததாக நமக்குத் தெரிகிறது. இதற்கு மேல் இருந்தால் தொடர் புள்ளவர்கள்தான் சொல்ல வேண்டும். மோடி அவர்களை சீன அதிபர் அழைத்திருக்கிறாராம் சீனத் திற்கு. இவரும் வருகிறேன் என்று கூறியிருக்கிறாராம். இந்தச் சுற்றுலாபோல் அங்குமா? அல்லது மாறுமா?

# 1929 ஆம் ஆண்டு நடந்த மாநாட்டிற்கு மக்களை அழைக்கும் விதமாக

# கைவல்ய சாமியார் எழுதிய கடிதம்

**செங்கற்பட்டு ஜில்லாவும் சுயமரியாதை மகா நாடும் (திராவிட மலர் 1929) என்ற புத்தகத்திலிருந்து...**

நூற்றுக்கணக்காகவும் ஜனங்கள் ஒன்று சேர்ந்தால், ஒருமைப் பட்டு சிந்தையைச் செலுத்த முடிந்தால், ஒரே பாட்டைப் படிக்கச் செய்தாரானால், ஒரே ஒரு கொள்கையை நினைக்கவல்லவர்களானால், எந்தக் காரியத்தையும், திறமையாகச் செய்து விடலாம். ஜனங்கள் ஒன்று சேர்ந்து கண்களும் கைகளும் ஒன்று கூடினால் உடனே இருதயம் ஒன்று கூடத்தக்க சமயம் அநேகமாக வாய்த்து விடுகிறது. அறிந்தோ அறியா மலோ உணர்ச்சிகளும் எண்ணங்களும் கலந்து கூடு கின்றன.



ஜனங்கள் ஒரேவித உணர்ச்சி பெற்றவர்களாகவும், ஒரேவித சம எண்ணங்களுடையவர்களாகவும் ஆகி விடுகிறார்கள். அப்பொழுது பரஸ்பர சகோதர உணர்ச்சியும் ஒற்றுமையும் உற்பத்தியாகின்றன என்னும் தத்துவத்தின் பயனை ஒரே குழப்பமாகக் கலங்கியிருக்கும் நமது ஜனகூட்டத் திலிருந்து எடுத்து திறமாக வகுக்கப்பட்ட உறுப்பு களுடன் விளங்கும் சமூகங்களுடன் சரிசமமாக நம்மையும் நிறுத்தவே செங்கல்பட்டில் மகா நாடு கூடுகிறார்கள். அங்க நாமெல்லோரும் போய் ஆத்ம சக்தியை டம்பமின்மை யில் விருப்பத்தை அயலாருக்குத் தர வேண்டுமென்ற நம்பிக்கையை உபயோகப்படுத்திக் கிறீச்சுக் கிறீச் சென்று கத்திக் கொண்டு போகும் மனுசீய அபிவிருத்தி யென்ற தேருக்குப் புதிய பாதை யொன்று கண்டு பிடிப்பதற்கே அந்தக் கூட்டம் நம்மை எல்லாம் கூப்பிடுகிறது.

இதற்குக் காரணமாகவிருக்கும் செங்கல்பட்டு ஜில்லா போர்டுத் தலைவர் கனம், ரெட்டியார் அவர் களுக்கும், சேர்மென் முதலியார் அவர்களுக்கும், இவர்கள் சகாக்களுக்கும் வணக்கமும், நன்றியும் தெரியப் படுத்தி விட்டு

குடி அரசின் மூன்றாம் பக்கத்தில் உங்களுக்குச் சில சங்கதிகளைச் சொல்கின்றேன்.

ஜனங்களின் எல்லா வகுப்பினரும் ஒன்று கூடுமாறு வசதியுடன் கூடிய சமுதாய சமய உற்சவங்களை விர்த்தி செய்யப் புறப் பட்டிருக்கும் கணவான்களுக்கும் வணக்கம். ஆத்மீக சேர்க்கையால் ஜனங்கள் தம் இருத யங்களை ஒன்றுகூடச் செய்யத் தக்கபடி வசதிகளும், ஜனங்கள் எப்படி யெவ்வளவு

தூரம் நெருங்கலாமோ அவ்வளவு வரையில் சுபாவமாக நிற்கும்படியான சாதனங்களும், இந்த உற்சவங்களில் வகுப்பு வாரிப் பகுதிகளையும் பல மதப் பிரிவுகளையும் சுயமரியாதை என்னும் தருமத்தால் தாண்டி மேலான தேசிய உணர்ச்சி தன்னலமற்று விளங்கவும், கலைஞானங்கள் கைத்தொழில் விருத்திகள் புத்தகாலயங்கள், பௌதீக சாஸ்திர ஆராய்ச்சிச் சாலைகள், விளையாட்டுப் பூமிகள், உபன்னியாச மேடைகள், சமூக உணர்ச்சியைப் பரவச் செய்யும் கூட்டங்கள் சுயமரியாதைக் கூடா ரங்கள், சாதியில்லாத சமயதேசிய நாடகசாலைகள் பாங்கியில், தந்தி, தபால் முதலியவை சேர்க்கப்பட்டு பல சாதியென்றும் பல சமயமென்றும் பல பிரி வென்றும் சொல்லப்படும் ஒரே கூட்டத்தினர் கூட்டம் போடும் கூட்டத்தின் வேலைகளும், வினோதங்களான அலங்காரங்களும், யானை பவனிகளும் ஆரோக்கியத் தையுடைய வாலண்டியர்களின் ஆசார உபசாரங்களும், கண்டு களிப்பதற்கு நாமெல்லாம் போவோம் வாருங்கள்! முற்காலங்களில் விளங்கியது போலவே சகோதர சகோதரிகளும் மனைவியுடன் புருசனும் தாராளமாக நடந்து விளையாடட்டும். தாய்மார் களைப் புத்திரர்கள் அழைத்துச் செல்லட்டும்.

கை எப்போதும் உடம்பில் நோவுள்ள இடத்தைப் போய்த் தீண்டுவது போலவே நம்முடைய கருத்து முழுவதும் செங்கல்பட்டு மகாநாட்டை நோக்கியே செல்லுகிறது. பல நூற்றாண்டுகளாக நாம் வாயை மூடிக் கொண்டு அவமானப் பட்டதெல்லாம் ஒன்று சேர்ந்து கடைசியில் சுயமரியாதை மகாநாடாகப் பரிணமித்திருக்கிறது. உலகத்தில் இப்பொழுது மனுசிய சாதி மொத்தத்திற்கே பெரிய திருவிழா நடக்கிறது. அந்தத் திருவிழாவிற்குத் தெய்வம் உங்களையும் கூப்பிடுகிறது. பூசாரி தடுக்க இடம் கொடுக்காதீர்கள். சிறிது பணக்காரன் வந்தால் பூசாரி பல்லைக் காட்டுவான், அன்னிய தேசத்தான் வந்தால் எதிர் கொண்டழைத்து நல்லாவுகூறி அடுக்களைக்குள்ளும் விடுவான்.

தன்னைக் குருவாக நினைத்து தன் மதத்திலிருக்கும் ஜனங்களைக் காலால் மிதித்து வீதியில் கூட விடாமல் தள்ளிவிடுவான், நாம் செய்யுங் கொடுமையும் அவர்கள் கஷ்டமும் அவர்களை அன்னிய மதத்திற்கு கொண்டு போய்ச் சேர்க்கின்றன. அதனால் நமது சமூகம் குறைவுபட்டு அவற்றால் வரும் பல துன்பங்களுக்குச் சர்க்கார் அதிகாரிகளின் காலில் போய் விழுவார்கள். பின் சர்க்கார் மத விசயத்தில் பிரவேசிக்கப்படாதென்று சத்தமும் போடுவார்கள். இதெல்லாம் என்னவென்று கேட்டால், சனாதன தருமம் என்பார்கள். அத் திருவிழா கடவுளுக்குக் கண் குருடில்லை. இப்படிப் பட்ட வேற்றுமையை அவர் பொறுக்க மாட்டார். நீங்களும் அதற்கு உடந்தையாக யிருந்தீர்கள். இன்னுமிருக்கிறீர்கள். அந்தப் பாவம் நம்முள்ளத்தில் வெட்கமாக வந்து ஆடுவதை நீங்கள் உணராவிட்டா லும் வெளியே தெய்வக் கோலமாக வந்து உங்களையும் சுட்டும் தொலைத்து விடுமென்பதை உணருங்கள்.

தெய்வ விரரோதமான இந்தக் குருட்டுக் கொள்கை யைத் தைரியத்துடன் எதிர்த்துப் போவோரை, குருட்டு நம்பிக்கையென்ற மூடச்சுமையால் முதுகு வளைந்து போய்த் தன்னைத்தான் நம்பாத கோழைப் பத்திரிக் கைப் பண்டிதர்கள் நாஸ்திகக் கிபார்ச்சி யென்கிறார் கள் “குடி அரசு” அவர்களுக்கு உலகம் ஒத்துக் கொள் ளும்படியான பதிலை ஞாயமாக எடுத்துக் காட்டும்.

பல தலைமுறைகளாக நீங்கள் உங்கள் பழக்கங் களில் தொழில் செய்தும் புண்ணியம் தேடியும் பல சடங்குகளால் சங்கடப்பட்டும் சலித்தும் பல ஆசார அனுஷ்டானங்களால் நடித்தும் அதிர்ஷ்டம் வருமென்று தொழுதும், அடிமை பூண்டும் சூத்திர னென்னும் இழிவுப் பெயரைத் தாங்கியும் வந்திருக்கிறீர்கள். இதை எல்லாம் செங்கற்பட்டு மகா நாட்டில், பழங்கதை போல் சுழற்றி எறிதல் கையும் கண்ணுமுடையவர்களுக்கே முடியுமேயல்லாது புருஷவேஷ அலங்காரவாகன சௌகரியங்களாலும் உயர்ந்த கலாசாலை முத்திரையாகிலும் முடியாது. சமூகத்தினுடைய அஞ்ஞானப் பழக்கம் உங்களுடைய இரத்தத்தில் கலந்திருக்கிறது. உங்கள் எலும்பின் மஜ்ஜைக்குள் தசைக்குள் மூளை நிணத்திற்குள் கலந்திருக்கிறது.

ஆனதால் நீங்கள் பிரயோஜனமற்ற கிரிகைகளை விடுவதெல்லாம் அஞ்ஞானப் பழக்கம் தொழில் செய்யவரும். அதற்குப் பல கடவுளின் கடாக்ஷம், சாஸ்திர ஒழுங்கு, குருக்கள் உபதேசம், பெண்ஜாதியின் பிடிவாதம், சமயப் பெரியவர்களின் சாசிகள், வக்கீல் வாதங்களைப் போன்ற சமயோஜித சந்தர்ப்ப வார்த்தைகள், பந்துக் கூட்டங்களின் கட்டாயம் முதலியவைகள் பக்க பலமாக விருப்பதால் அதன் தொழில் உங்களுக்குத் தெரியாமலே வரும். உங்களிச் சையை மீறியும் வரும். அப்பொழுது நீங்கள் ஆயாளையோ அம்மாளையோ அக்கம் பக்கத்தாரில் யாராவது ஒருவரையோ ஈடுகொடுத்து அவர்கள் பேரில் பழியைப் போட்டுவிட நேரிடுகிறது. இது உங்களுக்கு என்ன பலனைக் கொடுக்கிறதென்றால், மரணம் வந்தாலும் சொன்னது தவறார், அற்பலாபத் திற்காக பிறரை வஞ்சித்தால் இகழ்ச்சி யென்று கொள்வர். போரிலும், மானம் கெட்ட செய்கை செய்வதிலும் தோல்வியே மேலென்று கொள்வர். அப்படிப்பட்ட வீரர்களின் மரபில் பிறந்த நீங்கள் உண்மையான ஆண்மைக்குத் தகாத சித்தமுடையவர் களென்று கருதப்படுவீர்கள்.

அது மட்டுமல்ல, தெருவில் போகும் சிறுவன்கூட உங்கள் மீது நீங்கள் உண்மை தெரிந்தும் சொன்னபடி நடக்காதவர்கள் என்னும் பரிகாச அலட்சிய மொழி களை வீசியெறிவான். அது உங்களுடைய சட்டையின் வாற்புறத்தில் ஒட்டிக் கொண்டு அழிக்க முடியாமல் போய்விடும். நீங்கள் செத்து சிவலோகம் போனாலும், வாழ்ந்து வைகுண்டம் சேர்ந்தாலும் உங்கள் உடம்பை

இடுகாட்டில் சுடும் சுற்றத்தார் சுடுகாட்டிலும் அதை விட்டு வீடு வந்து விளக்குப் பார்த்து அவரவர்கள் வீடுபோய்ச் சேர்ந்த பின்னும் இகழ்ச்சியாகப் பேசு வார்கள். செத்த பின் இகழ்ச்சியும், புகழ்ச்சியும் என்ன செய்யுமென்று நினைப்பதற்கில்லை. புகழ்ச்சியை உடையவன், புண்ணிய லோகத்திலும்

இகழ்ச்சியை உடையவன் நரகத்திலுமிருக்கிறான் என்பதற்குச் சாஸ்திரக் கதைகளும் அதற்கு ஆதார மான உலக வாழ்க்கைக் கதைகளுமிருக்கின்றன. அதில் ஒரு சிறு கதையைக் கீழே எழுதுகிறேன்.

**சிறுகதை**

ஒரு சந்நியாசி இளைப்பாறுதற்கு ஒரு தாசி வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தார். இறந்து போன பிரேத ஊர்கோலம் அந்தத் தாசியின் வீட்டு வழியே போயிற்று. அதைக் கண்ட தாசி, தன் வேலைக்காரி யைப் பார்த்து, 'அடியே நீ போய் இறந்து போனவர் சொர்க்கத்திற்கா, நரகத்திற்கா போகிறார் என்பதைத் தெரிந்து வா' என்று அனுப்பினாள்.

திண்ணையில் படுத்திருந்த சந்நியாசி இதைக் கேட்டுத் திடுக்கிட்டு ஆச்சரியப்பட்டு 'சுவர்க்கத்தையும் நரகத்தையும் பற்றின உண்மையைத் தெரிவதற்கு அநேக சாஸ்திரங்களைப் படித்தேன், திவ்விய ஸ்தல யாத்திரையெல்லாம் செய்தேன், எல்லாக் கோவிலுக்கும் போனேன், புண்ணிய நதிகளிலெல்லாம் முழுகினேன். பக்தியிலீடு பட்டேன். யோகத்திலும் சிறிது பழகினேன். ஞானத்தையும் சிந்தித்தேன். இத்தனையாலு மிதனுண்மை விளங்காமலிருக்கையில் இவளுக்கு எப்படி விளங்கிற்று? இவளோ தாசி. அதிலும் வேலைக்காரியை அனுப்பி இதைத் தெரிந்து வரும் படியாகச் சொல்லியிருக்கிறாள் என்று ஆச்சரியமாக நினைத்துக் கொண்டிருந்தார். அதற்குள் வேலைக்கா ரியும் வந்து, "அம்மா அவர் சொர்க்கத்திற்குப் போகிறார்" என்றாள். கேட்டார் சந்நியாசி.

மனம் திகைத்துப் போய் ஆச்சரியத்திலும் ஆச்சரியப்பட்டு, "கடவுள் கருணை இருந்தவா றென்னே, இந்த அபூர்வ சக்தி இவளுக்கு எப்படி வந்தது? அதிலும் அரி என் கின்ற அட்சரம் கூடத் தெரியாத வேலைக்காரி சொர்க்க, நரகத்தை எப்படி கண்டு வந்தாள்? இந்த கடாட்சமும் யாரால், எவ்விதத்தால் வந்தது, சுந்தரருக் காக சுந்தரமூர்த்தி களின் பாதம் பட்ட இடமிதுதானா? மடாதிபதிகளின் ருத்திராசக் கண்டிகைகளும், காஷாய புக்மசிலின்களும் இவர்கள் பேரில் பட்ட பரிச உணர்ச்சியாக விருக்குமா? அல்லது மாயன் பெருமா ளுடன் பகடையாடின மகந்துகள் ஜலக்கிரீடையின் பாக்கியத்திற்கு இவளும் பாத்தியதை உடையவளாக இருந்தாளோ? அல்லது எம்பெருமானுக்கு படைக்கும் அக்கார அடிசிலும், வெண்பொங்கலும் சோறு குழம் பாக இவள் வீட்டில் சிந்திக் கிடப்பதை விளக்கு மாற்றால் அடித்துக் கூட்டிப் பெறுக்கிக் குப்பைத் தொட்டியில் எறியும் பிரசாத சுத்தம் பண்ணும் கைங்கரிய புண்ணியத்தைச் செய்யும் வேலைக்காரிக்குக் கிடைக்கும் பிரசாத மகத்துவமா? அல்லது சுவாமிக்குப் படைக்கும் பாவாடைச்சாத வகைகளெல்லாம் சாக்கடைத் தண்ணீரில் உருட்டிக் கொண்டு போகும் தீர்த்த மகத்துவமாக விருக்குமோ? அல்லது சுவாமிக்கும், அம்மனுக்கும் அலங்காரம் செய்யும் பல புஷ்ப ஆரங்களும் அணியும் கலவைச் சாந்துகளும் இவள் படுக்கையில் சிந்திக் கிடப்பதால் அதின் மேல் இவள் திரேகம் புரளும் பாக்கியத்தின் பிராப்தியாக விருக்குமோ? அல்லது இவைகளை அங்கு கொண்டு வந்து இவளுக்கணிந்த ஆச்சாரி குருக்களான அந்தணர்களின் ஆசிர்வாதமாக விருக்குமோ? அல்லது நம் தென் தேசக் கடவுளாம் முருகன் தெண்டபாணி யென்றும், கந்தனென்றும், கடம்பனென்றும் எழுந்தருளின கார்த்திகேயனுக்குப் போகும் பாற்காவ டியும், பன்னீர்க்காவடியும் அதன் பாலும் பன்னீரும் இவள் வீட்டுப் பள்ளியறையில் தண்ணீராகும் செல்வம் பரலோகத்தைக் காட்டி விட்டதோ? என்னவோ! எதனால் இவளுக்கு இவ்வுண்மை விளங்கிற்று! எனக்கொன்றும் தெரியவில்லை.

எல்லோருக்கும் பொதுவில் நடனமிடும் சிவமே உன்னைச் சாத்திரத்தாலும், சமயத்தாலும் அறிய முடியாமல் அவரவர்களுக்கு அப்படி அப்படி இருப்பாய் என்கின்றார்களே, அவ்வன்பு எனக்குத் தெரியவில்லையோ! அதன்பிறகு அன்பே சிவமென்கிற பாட்டும் அர்த்தமாகவில்லை என்று பலவாறாக சந்நியாசி நினைத்து அவளிடமே, இதனுண்மையைத் தெரிந்துகொள்வோமென்று அவளிடமே போய், "தாயே இதனுண்மையை எவ்விதத்தால் நீ யறிந்தாய்" என்று கேட்டார்.

தாசி சந்நியாசியைப் பார்த்து "ஏ சந்நியாசி! அறிவிற்கும் மேன்மைக்கும் உலக அறிவு கற்க வேண்டுமென்று வள்ளுவர் சொன்னதை மறந்தீர்கள்" என்று சிரித்து, "அடியே, வேலைக்காரி! நீ சொர்க்க, நரகத்திற்குப் போகிறவர்களை எப்படிக் கண்டாய் என்னும் தத்துவத்தை இந்த சந்நியாசிக்குச் சொல்" என்றாள். உடனே வேலைக்காரி சந்நியாசியைப் பார்த்து, "படித்தும், பக்தி செய்தும், தனக்குத் தெரியாவொன்றைப் பாடி விட்டுப் போனவர்களின் பாட்டைப் படித்து தன் வயிற்றை நிரப்பும் பெரியவரே! உலக அறிவைத் தன்னறிவால் எவன் கற்றுக் கொள்ளு கிறானோ அவனே பண்டிதன். அவனுக்குப் பின்னால் நிற்கும் சன சமூகமே அவனுடைய சொர்க்க நரகங் களைத் திறந்து விடுகிறவர்கள். சொர்க்கம் வேண்டி

னாலும், நரகம் வேண்டினாலும் எது வேண்டினாலும் அவர்களே நுழைந்து கொள்ளலாம். அநேக காலத்திற்கு முன்னே இதை உலகம் தெரிந்துமிருக் கிறது.

இதிலிருந்தே நானும் எனது எஜமானியும் இதனுண்மை தெரிந்தோம். ஒவ்வொருவர் இறந்த பின் அதைக் கண்டு பிடித்துக் கொண்டேயிருக்கிறார்கள். அந்த உண்மை தெரிந்து அந்தப் பிணத்தின் ஊர்கோலத்துடன்கூட சிறிது தூரம் சென்றேன். உலக அறிவால் உண்மையாகத் தெரிந்ததை தைரியமாக அனுபோகப்படுத்துவதில் உண்மையுடையவனென்றும் பிறர் துன்பத்தைத் தீர்த்துத் தன்னலத்தை விட்ட தயாளனென்றும் புகழ்ச்சியோடு அக்கூட்டம் இறந்து போனவரைப் பற்றி பெருமைப்படுத்தினது. அதனால் அவர் சுவர்க்கத்திற்குப் போகிறார் என்று தெரிந்தது. ஆண்மையற்ற தனத்தால் இகழ்ச்சியை யடைகிறவர்கள் நரகத்திற்குப் போகிறார்கள் என்று நான் சொல்லா மலே தங்களுக்கு விளங்கும்“ என்று சொன்னாள். கேட்ட சந்நியாசிக்கு சந்தேகம் தீர்ந்தது.

ஆகையினால் உண்மையைக் கடைபிடிக்கும் உத்தமர்களே! செங்கற்பட்டில் கூடப்போகும் சிநேகி தர்களே! கூட்டமாகக் கூடிப் பிரியாமல் உள்ளதை உள்ளபடி தெரிந்து, தெரிந்த வண்ணம் தீர்மானம் பண்ணினதை நடத்தையில் காட்டினீர்களானால் உங்களுக்குப் புண்ணியமுண்டு, புகழுமுண்டு, நரக மில்லை, நாடும் கெடாது. இதை இன்னொரு தரம் படித்தும் நினைத்தும் பாருங்கள்.

இந்தக் கூட்டத்தைக் கூட்டும் நமது பெரியார வர்கள் எதற்காகக் கூடுகிறார்களென்றால் சுயமரி யாதை வேண்டுமென்னும் தற்புகழ்ச்சிக்கன்று. பிறரைத் துன்புறுத்தவுமன்று. பிறர் செல்வத்தைப் பறிக்கவு மன்று. பெருந்தொகையான ஜனங்களைக் கூட்டி பெருமடங்கான சக்தி சம்பாதித்து சுவாமிகளும், அவரின் முதற்பிள்ளையான பார்ப்பார்களும் சமயப் போரால் கொள்ளையடித்துக் கூட்டி வைத்திருக்கும் தொழிலின் லாப நஷ்டங்களை பங்கிட்டுக் கொள்ளுவ தற்கன்று. வீர ஆண்மையின் உதய காலத்தில் வானம் மண்ணை நெருங்கி வந்த காலத்தில் மனிதன் தனதாத்மாவிலும் ஜகத்தைப் பிரகாசப்படுத்திய பரமாத்மாவினிடத்திலும் நம்பிக்கை கொண்டிருந்த புராதன காலத்து நடுநிலைமை வகித்த பெரியவர் களைக் குற்றம் சொல்லவுமன்று.

உயிருள்ள வளர்ச் சிக்கு உங்களறிவை இக்கால நிலைக்கேற்றவாறு செலுத்திப் பார்க்கும் பண்டிதர் களைப் பகைக்குவு மன்று. தேசப் பொறுப்புகளை வகிக்கும் இயற்கையு ரிமை இல்லாதது போலவே சமயக் கொள்கையின் சமத்துவ நிலையில்லா முழுப் பயன் கேடாகிய இகழ்ச்சியின் துன்பங்கள் நம் நெஞ்சைத் தின்னு கின்றன. அதற்கொரு வழி காணவே செங்கல் பட்டில் உங்கள் நாட்டைக் கூட்டியிருக்கிறார்கள்.

**இருங்கோவேள்**



## மருத்துவம்

உடல் கழிவுகளை வெளியேற்றும் எளிமையான இயற்கை மருத்துவம். திடக்கழிவு, திரவக்கழிவு, வாயுக்கழிவு இவைகளை வாழ்நாள் முழுவதும் எளிமையாக நீக்கும் முறை.

ஒரு குவளை நீரை குறைந்த தனலில் வைக்கவும், கொதிக்க வேண்டியதில்லை. நாம் தாங்கும் சூடு இருந்தால் போதுமானது. ஒரு காலிக் குவளையில் அரை எலுமிச்சம் பழம் (சிறியதாக இருந்தால் ஒன்று) எடுத்து பிழிந்து கொள்ள வேண்டும்.

மூன்று தேக்கரண்டி தேன் எடுத்து எலுமிச்சைச் சாற்று டன் கலக்கவும். வெந்நீரையும் சேர்த்துக் கொள்ளவும்.

காலையில் முதல் உணவாக இதைப் பருக வேண்டும். பருகும்போது உமிழ்நீருடன் நன்றாகக் கலந்து உட் கொள்ள வேண்டும்.

இதனால் உடலுக்குத் தேவையான உடனடி குளுகோஸ், தரமான உயிர்ச்சத்துகள், தாது உப்புகள் கிடைக்கும். கழிவுகள் உடனுக்குடன் நீக்கப்பட்டு விடும். கேன்சர் நோய் அண்டவே அண்டாது.

**- வி. ஆரோக்கிய சார்லஸ்.**

## பகுத்தறிவு பகலவன்

வெண்தாடி கொண்ட
கருப்புச் சட்டைக்காரர்
பெண்ணும் ஆணும்
சரி சமம் என்றார்
கைம்பெண்டிரை
மறுமணம் செய்யச்
சொல்லி அறிவுறுத்தினார்
ஆசாமியை நம்பு
சாமி வேடமிட்டவனை
நம்பாதே என்றார்
பகுத்தறிவுச் சிந்தனைகள்
வளர்த்தார் ஈரோட்டார்
சாதி மதங்களை
ஒழித்திடத் துடித்தார்
திராவிடத்தால்
புரட்சியை இம்மண்ணில்
ஊன்றி நீரூற்றினார்
அதுதான் வளர்ந்து
நம்மை நிமிரச் செய்திருக்கின்றது.

**வாணியம்பாடி தியாகராசன்.**

# கண்மாய் கல்குவாரியானது?

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை தாலுகா, காளையார் கரிசல்குளம் கிழக்குப் பஞ்சாயத்தில் உள்ள கண்மாயில் நான்கு கல்குவாரிகள் இதுவரை செயல்பட்டு வந்தன. சுமார் 51 அடி அளவிற்கு பாறைகளை வெட்டி எடுத்திருக்கிறார்கள். இந்த கல்குவாரிகளை ஏற்படுத்தி பணம் பார்ப்ப வர்கள், பாண்டியம்மாள் என்பவரும் அவரது கணவர் பெருமாளும் என்று சொல்லப்படுகிறது.

கண்மாய்க்குள் லாரி செல்வதற்கான பாதைகளை ஏற்படுத்தியதன் மூலம் கண்மாய்க்கு பாதிப்பு ஏற்பட் டுள்ளது என்பதோடு, லாரிகளின் போக்குவரத் தால், போக்குவரத்து நெரிசல், விபத்து, குடியிருப்பு களில் தூசி என்று பல தொல்லைகளுக்கு அப்பகுதி மக்கள் ஆளாகியிருக்கிறார்கள். உணவு சமைக்கும் போதும், உணவை உண்ணும்போதும் எவ்வளவு பாது காப்பாக இருந்தாலும் கூட, தூசி கலந்த உணவைத் தான் சிறுபிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை உண்ணும் நிலை இருந்தது என்கிறார்கள் அவ்வூர் மக்கள்.

பொதுமக்களைப் பாதிக்கும் இச்செயலை நிறுத்திட ஊர் மக்களெல்லாம் முயற்சி செய்திருக்கிறார்கள். முன்னாள் இராணுவ வீரர் திரு. ராமராஜ் என்பவர், மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் இது தொடர்பாக வழக்குத் தொடர்ந்திருக்கிறார். அவ்வழக்கின் முக்கிய அம்சமாக அவர் குறிப்பிட்டது, காலை 5 மணி முதல் மாலை 6 மணி வரை நூற்றுக்கணக்கான லாரிகள் கற்கள் ஏற்றிச் செல்வதால் காற்றில் தூசிபடிந்து, ஊர்மக்களின் உடல் நலம் பாதிக்கப்படுகிறது. கண் மாய்க்குள் 20 அடி அகல பாதை அமைத்து லாரிகள் குவாரிக்குள் செல்வதால் கண்மாயும் சீரழிக்கப்படு கிறது. எனவே கண்மாய்க்குள்ளும் கிராமத்திற்குள்ளும் லாரிகள் செல்வதற்கு தடை விதிக்க வேண்டும் என்பது தான் அது.

பெருமாள் அவர்களது இவ்வழக்கை, நீதியரசர்கள் சிவஞானம், தாரணி ஆகியோர் விசாரித்தனர். மனுதாரருக்காக வழக்கறிஞர் திரு. ஆர் கருணாநிதி நேர்நின்று தங்கள் தரப்பு வாதத்தை நீதியரசர்கள் முன் வைத்தார்.

அதன்பிறகு, கரிசல்குளம் கிழக்குப் பஞ்சாயத்துக் கண்மாய்க்குள் பாதை அமைத்து லாரிகள் செல்வதற்கு தடை விதிக்க வேண்டும் என்று விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நீதியரசர்கள் உத்தரவிட்டனர். அடுத்த கட்ட விசாரணை வரும் 21ஆம் நாள் என்றும் கூறியிருக்கின்றனர்.

தற்காலிகமாக தூசி மூக்கிற்குள் போகாது என்ற நிம்மதியில் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றனர் ஊர் மக்கள்.

செய்தி : **ஜோ. ஜோயல்,** சமூகஆர்வலர்.
காளையார் கரிசல்குளம்,



சங்கத்தமிழில் “கடவுள்” உண்டா? எனில் யார்? சங்கத்தமிழில், “இறை” என்பது இயற்கை வழிபாடே! புராண புருடாணங்கள் ஒன்றுமில்லை!

இயற்கைக்கு மாறான இறைக்கொள்கை முதல் இடைச்சங்கத் தமிழில் இல்லவே இல்லை! என்ன ஆதாரம்? என்ன துரவு? “கடவுளும் இலவே” என்ற சங்கப்பாடல் மாங்குக் கிழார் பாடியது!

“விநாயகர் சங்கத் தமிழில் இல்லை“ ன்னு முன்பு வெறுமனே பதிவு தான் இட்டேன். அதுக்கே, டிவிட்டர் இல் சில பெரியவா, தய்யாதக்கான்னு குதிச் சாங்களாம். Okies; I am Very Sorry! But என்ன தான் குதிச்சாலும், விநாயகரைச் சங்கத் தமிழில் கண்டு பிடிக்க முடிஞ்சுதா? இல்லை தானே? அதான் உண்மை. Matter is Very Simple! இன்றைய நிலை வேறு, தொன்மம் வேறு!

இன்று இன்றாக இருக்கட்டும்: தொன்மம் தொன்மமாக இருக்கட்டும்! இந்தப புரிதலே போதும்! உங்களுக்கு இன்னிக்கி புடிச்சிருக்கு என்பதற்காக தொன்மத்தை மாத்தி எழுதீற முடியாது. உங்க தனிப்பட்ட விநாயக வழிபாட்டை இழிவு செஞ்சா, அது தப்பு.

ஆனா, சங்கத் தமிழில் விநாயகர் இல்லை ன்னு எழுதினா? தப்பு அல்ல: அது தொன்மவியல்!

தமிழ் நிலத்தின் இறைத்தொன்மம் நடுகல்“! தமிழ் முன்னோர் தலைவர்கள் தங்கள் ஆதிகுடிகளைக் காத்த நினைவாக கல் சமைத்துப்போற்றுவது நடுகல் நீத்தார் பெருமை! அதுவே இறைமை! “கந்து“ என்பதும் உண்டு கல் தூண்! கந்து / நடுகல்லில் குடி காத்தவர் களின் பெயர் / படம் எழுதி வைப்பதும் உண்டு!

முல்லையின் மாயோன் (திருமால்) குறிஞ்சியின் சேயோன் (முருகன்) இப்படித்தோன்றியவர்கள் தான்! ஆதி குடிகளின் இனத்தலைமை! கந்தன் இவன் ஸ்கந்தன் அல்ல! திருமால் இவன் விஷ்ணு அல்ல!

இவர்கள் ஆதி குடி நாட்டார் தெய்வங்கள். பின்னாளில் சமஸ்கிருதம் கலந்து, புராணக் கதைகள்



# சங்கத்தமிழில் இறை

ஏற்றப்பட்டு பெரும் தெய்வங்களாய் மாறிப்போனது அப்புறம் தான்.

சைவம், வைணவம் என்ற பேரே சங்கத் தமிழில் கிடையாது. மத அமைப்பு" இல்லவேயில்லை. முல்லை காட்டின் அடர் கருமை மாயோன் குறிஞ்சி மலை உச்சியின் சிவப்பு சேயோன், மால் தங்கள் கண்ணுக் குப் பச்சைப்பசேல் எனக்காட்சி வழங்கிய காட்டின் இயற்கை அழகை, மால் என்று ஆதித்தமிழர்கள் வழுத்தினர். திரு.வி.க.ஆய்வுரை!

மாயோன் வழிபாடு தமிழ்நாட்டின் பூர்வீக வழிபாடுகளில் ஒன்றாகும், மாயோன் என்பது கருமை நிறமுடையவன். திருமால் எனப்பொருள்படும்" ஈழத்து அறிஞர்கள் கா. சிவத்தம்பி!

முருகு பெண்கள் மேல் இறங்கும் ஒரு "ஆவி த் தெய்வம் என்பதே சங்க மரபு! "வேலன் வெறியாடல்" என்கிற நாட்டார் பூசை. வெறியாடிகளின் மேல் முருகு இறங்கல், ஆட்டுப்பலி, சூர்மடிதல் ன்னு பழங்குடி வழக்கம்.

கந்து யானையைக் கட்டி வைக்கும் குறுந்தூண்: அதையும் அந்த யானையே தான் சுமந்து செல்லும்! தன்னைக் கட்டும் ஒன்றையும் தானே சுமந்து செல்லுதல் போல் கட்டுப்படாக் கடவுளும், அன்பால் தானே கட்டுப்படல். அதுவே கந்து அன் கந்தன்!

வள்ளி கந்து (எ) கல்தூணில் படரும் வள்ளிக் கொடி! இது முன்னோர்களின் காதல் வாழ்வுக்கு அடையாளம். மறைந்துவிட்ட தலைவன் தலைவி நடுகல்லும், அதில் படரும் கொடியுமாய்! கொடிநிலை, கந்தழி, வள்ளி (தொல்காப்பியம்)

நினைவு போற்றுதல்! அன்பே தெய்வம்! இயற்கை வாழ்வு ! புராணங்கள் இல்லை. நடுகல்லு வச்ச இடத் தில் ஒரு காதல் காட்சி! அவளுக்கு அவன்மேல் "மிக்க" அன்பு! அவனோ அவளைக் கண்டும் காணாதது போல் இருக்கான். தன் காதலை வாழ்விக்க முடியாம, அவ என்ன பண்ணுறா? தற்கொலை? இல்லையில்லை!

சூர் நசைத்தலையாய் நடுகல்" கண்டே பரிந்தனென் அல்லனோ, இறை இறையானே முன்னோர்களே, நீங்க தூக்கி வளர்த்த இவனுக்கு நீங்களே என் அன்பையும் புரிய வைக்கக்கூடாதா? என்று நடுகல்லையே அவ வணங்குறா!

தன் முன்னோர் மரபின் மேல், அவகொண்ட மதிப்பு! அந்த மதிப்பால், அவன் மதிப்பில் அவ உசந் துட்டா. அவன் அவளைப் புரிஞ்சிக்கிட்டான்: இதழ் இழுத்து உறிஞ்சிக்கிட்டான். இதுவே மாமூலனாரின் குறுந்தொகைப்பாடல்!

இந்த நடுகல், பார்ப்பதற்கு இன்றைய லிங்கம் போல் இருந்தமையால், சில ஆய்வாளர்கள் லிங்கம் என்று பிழையாக எண்ணி விட்டார்கள். ஆனால், அன்றைய தமிழில் "ல" ன்னே எழுத்து தொடங்காது. லக்ஷ்மி இலக்குமி லிங்கம் இலிங்கம்! லிங்கம் வட மொழி. தமிழில் எழுதும் போது இலிங்கம்!

அப்புறம் எப்படி நடுகல் லிங்கம் ஆகும்? தொன்மவியல் ஆய்விலும் ஆய்வாளரின் சைவப்பற்று: மதம் ஆன பேய் வந்து ஊடாடினால்? இதான் கதி

தொல்காப்பியர் காட்டும் நடுகல் சீர்த்தகு மரபு காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல் சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் தொல்,. புறத்திணை. இந்த மரபு தான் தமிழ் மரபு என்று ஓங்கி வளர்ந்தது!

முன்னை மரபின் முதுமொழி முதல்வ திருமால். அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக முருகன்.

**கலப்பின் காலம்**

வணிகம் தொடர்பு காரணமாய், வடமொழி (எ) வடநெறி தமிழ் நிலத்தின் ஓரமா வந்து குந்திக்கிட்டு இருக்கு! இது தொல்காப்பியருக்கும் தெரியும்! அதான் வட எழுத்து ஒரீ இ" (ஒதுக்கு) ன்னு எழுதினாரு! பண்பாடுகள் சற்று கலக்கத்தான் செய்யும்! யாரும் தனித்து வாழவியலாது: ஆனால், அப்படிக் கலக்கும்போது "ஒரு சமூகம், தன் வேர்களை இழந்து விடக்கூடாது" மரியாதையுடன் கூடிய கொடுக்கல் வாங்கல்: அதுவே நல்லது!

தமிழில் 5 % பிற மொழிச் சொல் ஓகே... ஆனால் 35சதவீதம் சமஸ்கிருதச் சொல் புகுத்தினால்? பேரசைட் போல் ஒட்டி ஒட்டியே உறிஞ்சி இழுத்து விடும்! சொல்/பொருள் என்ற சொற்களே நாளடைவில் மறைஞ்சிப்போய் வார்த்தை / அர்த்தம் ன்னே பழக்கம் ஆயீரும்!

ஆங்கிலமாச்சும் பரவாயில்லை, பிகர் ன்னு எழுதினா, உங்க பாட்டி கூட பிகர் என்பது இங்கி லீஷ்ன்னு சொல்லீருவாங்க..

ஆனா சமஸ்கிருதச் சொற்கள்: வார்த்தை/ அர்த்தம்? அதுவும் தமிழ் தானோ? எ. நம்மையே நம்ப வைத்துவிடும் தலைமுறைத் தீமை பேரசைட் தீமை!

நம்மிடம் இல்லாத சொற்களை, பிறமொழிகளில் இருந்து பெற்றுக்கொளல் தவறில்லை. ஆனால் இருக்கும் சொல்லை/சொத்தை அழித்து, கடன் வாங்குதல் அறிவீனம் அல்லவா?

தொல்காப்பியர், வடசொற்களும் தமிழில் புழங்க ப்ளக்சிபிலிட்டி, என நெகிழ்வு குடுத்தாரு, எடுத்துக் காட்டு, கமலம் தற்சமம் (அப்படியே எழுதுவது) பங்கயம் தற்பவம் (பங்கஜம் தமிழ் விதிகளுக்கு உட் பட்டு, பங்கயம் என்று மாற்றி எழுதுவது)

இந்த பிளக்ஸ்பிலிட்டி பெயர்ச் சொற்களுக்குச் சரிவரும்! ஆனா இதையே எல்லாத்துக்குமே நுழைக்கப் பார்த்தால்?

அரசர்கள்: அதிகாரம் மூலமா நுழைந்து கொண்டது வடநெறி மதம் என்கிற சக்தி வாய்ந்த போர்வை போர்த்தி வந்திருக்கே? Emotional Attack!

உன் பித்ரு முன்னோர்கள், மேல், லோகத்தில் வைரவதி என்னும் நெருப்பு ஆற்றிலே, பசி பசி என்று அலறுவார்கள்: ஆகவே தர்ப்பணம் கொடு" இப்படில்

லாம் சொன்னா, எதுக்கு வம்பு, உண்மையோ/ பொய்யோ, கொடுத்துத்தொலைச்சிருவோம் என்று செய்வீர்கள் தானே?

பண்டைத் தமிழ் மன்னர்களின் மன உணர்ச்சி பாவம். பாவத்தை ஈடு கட்டணுமா? புண்யம், ஸ்வர்க்கம், நரகம், ஹோமம், யாகம் இந்த வித்து (மாயை) தூவப் பட்டு விட்டது!

முது குடிப்பெருவழுதி பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி ஆனான்! பெருநற்கிள்ளி இராஜசூய யாகம் வேட்ட பெருநற்கிள்ளி ன்னு மாறிட்டான்!

அரச / அதிகாரப் பரவலே முதலில். பின்பே இலக்கிய சமூகப் பரவல்! ஆம்! அது கடைச்சங்க காலம்! கடைச்சங்க காலம் மதமில்லாத் தமிழ்ச் சமூகத்துக்கு , “மதம்“ பிடித்தது. ஜாதியும் பிடித்தது.

முல்லை குறிஞ்சி என்ற ஆதிகுடி காட்டு வாழ்க்கை! புலம் பெயர்ந்து..மருதம் என்ற வயல்வெளி / ஆற்றோர நாகரிகம் கண்ட மக்கள். நாகரிகம் செழிக்கச் செழிக்க, “அந்நிய நெறிகள்“ நுழைந்து, தமிழ் நிலத்தை மாற்றிப்போட்டது!

பண்பாட்டுக்கலப்புக்குப் பின்: அரசனைக் கொண்டது போல், ஒட்டுமொத்த சமூகத்தையும் எப்படிக்கொள்வது?

வாழ்க்கையின் துன்பமெல்லாம் விலகி ஓடணுமா? பூஜா புனஸ்கார ஜோதிட பரிகாரம், ஜோதிட் மயக்கம், நம் அப்பாவி மக்களுக்குப் பெரும் மயக்கம் அல்லவா?

(கண்ணகி கிட்டவும் பரிகாரம் செய்யச் சொல் றாங்க, இழந்த புருசனை அடைய ஆனா அவள் செய்ய மறுக்குறா)

தமிழ் மக்களே...உங்க முருகனும், திருமாலும், இங்கேயும் இருக்கா பாருங்கோ! எங்க சமஸ்கிருதத் திலும் இருக்கா பாருங்கோ! வெறுமனே நடுகல்லா இல்லாம....மேஜிக் ஜாலி யான புராணக்கதைகள்..

தங்கள் வேதக்கடவுள்களான சோமன், அக்னி, இந்திரன், அஸ்வின், மித்ரன், இவர்களையெல்லாம் சற்றே தள்ளிவைத்து, தமிழ்க் கடவுள்களையே புதிய புராணக் கடவுள்களாக உருவாக்கம்!

லோக்கல் பாணியில் பேசிப் பேசியே, லோக்கள் மக்களைக் கவரும் அன்றைய பிராமண சுவிசேஷம்..

கந்தன் : ஸ்கந்தன் ஆனான்! திருமால் விஷ்ணு ஆனான்! தமிழ்த்தொன்மங்களின் மேலேயே, பலதும் ஏற்றப்பட்டன. நம் தொன்மங்களை, நாமே இழக்க வைக்கும் “உத்தி“ புராணம் ஏற்றுதல்! இது எப்படிச் சாத்தியம் ஆயிற்று?

பிரபலம் கொழிக்கத் துவங்கியவுடன் அர்ச்சகாள் வந்துட்டா! ஆத்தாள் அம்பாள் ஆகி தல புராணமும் இப்போ வந்துருச்சு அல்லவா? அதே உத்தி! நமக்கும் ஆத்தாளை விட அம்பாள் என்று சொல்வதே ப்ரமோஷன் அடைந்த திருப்தி.

சிறு தெய்வம் நம் தாழ்வு மனப்பான்மை! அதையே மந்திரம் சொல்லிக்கொண்டாடினால்? பெருந்தெய்வம் உயர்வு மனப்பான்மை!

உங்க நடுகல் முருகனும் / திருமாலும், சேன்ஸ் கிருட்லயும் இருக்கா பாருங்கோ! முருகன் அங்க சுப்ரமணியன் கம்மி. திருமால் விஷ்ணு சற்று அதிகம். விஷ்ணு வை அங்கே அதிகம் பரவிட்டாங்க, மும்மூர்த்தியுள் ஒரு மூர்த்தி. முருகன் சுப்ரமண்யன் கம்மி. திருமால் விஷ்ணு சற்று அதிகம்.

விஷ்ணு வை அங்கே அதிகம் பரவிட்டாங்க: மும்மூர்த்தியுள் ஒரு மூர்த்தி. மோகினி கிளு கிளு கதைகள்! ஸ்கந்தனை“, ஏனோ அங்கு அதிகம் பரவலை: மும்மூர்த்தி ஆக்கலை. ஆனாலும், சுப்ரமண்ய ஸ்வாமி, தேவ ஸேனாபதி என்ற பட்டம்!

அங்கு அதிகம் பரவாதவன் மட்டுமே தமிழ்க் கடவுள் முருகன் என்று இன்றைய கண்ணுக்குத் தெரிகிறான். ஆனால், முருகனும் திருமாலும் இருவருமே தமிழ்த்தொன்மங்கள் என்று சங்கத் தமிழ்க்கண்ணுக்கு நல்லாவே தெரியும்!

முருகன் தமிழ்க்கடவுள் என்று சைவப் பெருமைக்கு இன்று சொல்லிக்கொண்டாலும் அந்தத் தமிழ்க்கடவுள் கதை பூராவும் சமஸ்கிருத, புராணக் கதையாய் இருப்பது ஏன்?


நெத்திக் கண்ணுல தோன்றினாரு, 6 ஒடம்பு ஒன்னாச்சு, கைலாஸ மலையில் பழம் நீ அப்பா, பிரணவ மந்திர உபதேசம், வீரபாகு ஃப்ரன்ட் ஆனாரு, பாஹ சமஸ்க்கிருதம்: தோள் எ. பொருள்! அப்புறம் எப்படித் தமிழ்க்கடவுள்....

அசுரர் குடியையே கெடுத்தாரு, அசுரர் குடிகெடுத்த ஐயா வருக தூங்கும் குழந்தைகள் உட்பட அசுரபட்டணத்தையே தண்ணிக்குள் மூழ்கடிச்சாரு, தேவஸேனா கல்யாணம், “தமிழ்க்கடவுள்“ முருகன் மேல் ஏன் பூராவும் சமஸ்கிருதக் கதைகள்? இந்த எளிய உண்மை நம் மக்களுக்கு உறைப்பதே இல்லை. அதான் மதம் என்கிற மாயை!

தங்கள் நடுகல்லும்/ தொன்மமும் பெருந் தெய்வமாய் மாறிப்போச்சு அப்போ ஆதி குடிகளின் கதி? கொல்லிப்பாவை, இசக்கி, சுடலை, சாத்தன்சாத்தி. இப்படி, முன்னோர்கள், வேறு வேறு பெயரில், வழிபட்டுக்குறுகிப் போயினர்! (சாத்தன்சாத்தி என்கிற தமிழ்ப்பெயர்கள்: சீத்தலைச் சாத்தனார், ஒக்கூர் மா சாத்தியார்)

மக்களும் மாறத்துவங்கியாச்சி அட, நம்ம முருகன் தானே, அங்கேயும் சுப்ரமண்ய ஸ்வாமியா இருக்கான்? கூடவே கிளுகிளு கதைகள்! கல்யாண வியாபார பரிகாரங்கள் ல்லாம் சொல்றாங்களே, வாழ்வில் வெற்றி பெறுவதற்கு? மன்னன் முதற்கட்ட மாற்றம்! மன்னன் இரண்டாம் கட்ட மாற்றம்!

**- தொடரும்**



# புத்திசாலி திறமைசாலி யார்?

அடர்ந்த காடு, அதனைச் சுற்றிலும் அழகான குட்டித் தீவுகள் இருந்தன. அந்தக் காட்டுக்கு ஒரு தலைவர் இருந்தார். அவர் காட்டுவாசிகளைத் தன்னுடைய சொந்த பிள்ளைகள் போல கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொண்டார். அவருக்கு வயதாகிவிட்டது. அவருக்குப் பிறகு அந்த மக்களை வழி நடத்த வேறு ஒருவரை நியமிக்க முடிவு செய்தார். அந்தக் காட்டில், பரம்பரை ஆட்சி என்ற வழக்கம் கிடையாது.

கடினமான போட்டிகளை நடத்தியே தலைவர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். எனவே, தலைவர் போட்டிகளை அறிவிக்கும்படி தன்னுடைய உதவியாளர்களுக்குக் கட்டளையிட்டார். நான்கு நாட்கள் நடந்த போட்டிகளில் இரண்டு இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இருவருமே வீரத்திலும், வலிமையிலும், சிறந்தவர்களாக இருந்தனர். மறுநாள் இரண்டு வீரர்களையும் அவருடைய இடத்துக்கு வரவழைத்தார்.

இருவரில் யாரைத் தேர்ந்தெடுப்பது என்ற பெரிய குழப்பம் வந்துவிட்டது இருவரையும் நேரடியாக மோதவிட்டால், பதவி ஆசையினால் ஒருவரை ஒருவர் பலமாகத் தாக்கி அதில் ஒருவர் கொல்லப்படுவது உறுதி. தலைவருடைய மனம் அதற்கு சம்மதிக்கவில்லை. எனவே, வேறொரு திட்டத்தை முடிவு செய்தார்.

“இளைஞர்களே! இதுவரை உங்களுடைய பராக்கிரமத்தால் உங்களுக்கு நிகர் யாருமில்லை என்பதை நிரூபித்துவிட்டீர்கள். இப்போது நடக்கப் போவது இறுதிப்போட்டி. இதில் ஜெயிக்கும் ஒருவன்தான் தலைவனாக முடி சூட்டப்படுவான். இப்போது உங்கள் இருவருக்கும் சில ஆயுதங்களும், சமையல் பாத்திரங்களும், நம்முடைய உணவு தானியமான சோளம் ஒரு மூட்டையும் கொடுக்கப்படும். நம்முடைய ஆட்கள் உங்கள் இருவரையும் நம்முடைய காட்டுக்கு அருகிலிருக்கும் வெவ்வேறு தீவுகளில் படகில் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்துவிடுவார்கள். நீங்கள் உங்களிடம் இருக்கும் தானியத்தை சமைத்து சாப்பிட்டு, அது தீரும்வரை காட்டிலேயே தங்கி இருக்க வேண்டும். உணவு தானியம் தீர்ந்தவுடன், தீவில் இருக்கும் மஞ்சள் மரத்தின் கிளைகளை ஒடித்து கடற்கரையில் தீ வைத்துக் கொளுத்தினால், அதிலிருந்து வரும் புகையைக் கண்டவுடனேயே இங்கிருந்து படகை அனுப்பி உங்களை மீட்டுக்கொள்ளுவோம்.

உங்களில் யார், கையில் இருக்கும் தானியத்தை அதிக நாட்கள் பயன்படுத்தி அந்தத் தீவில் வசித்துவிட்டு வருகிறீர்களோ அவன் தான் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்படுவான்“ என்றார். மஞ்சள் மரம் அந்த காடுகளில் அதிகமாகக் காணப்படும் ஒரு மரம், அதை எரிக்கும்போது எழும்பும் செம்பழுப்பு நிறப்புகை நீண்ட நேரம் நிலைத்திருக்கும்.

தலைவர் சொன்ன நிபந்தனைகளை இரண்டு வீரர்களும் ஏற்றுக்கொண்டு ஆளுக்கொரு தீவுக்குப் பயணமானார்கள். பொதுவாக ஒவ்வொரு காட்டு வாசிக்கும் ஒரு நாளைக்கு ஒரு படி சோளம் தேவைப் படும். அந்த இளைஞர்கள் அதிகமாக உடற்பயிற்சி செய்பவர்கள் என்பதால் அவர்களுக்கு சராசரியைவிட இரண்டு மடங்கு அதிகமாகத் தேவைப்படும். அந்தக் கணக்கின்படி பார்த்தால் ஒரு மூட்டை சோளம் அவர்களுக்கு மூன்று மாதகாலம் வரும்.

இறைச்சித் தேவைகளுக்கு அந்தத் தீவில் கிடைக்கும் முயல்களும், மீன்களும் போதுமானதாக இருக்கும். ஆனால், சோள அடையோ, சோளச் சாப்பாடோ சாப்பிட்டால்தான் அவர்களுக்கு பசி அடங்கும். அடுத்த இரண்டு மணி நேரத்திற்குள் ஆளுக்கொரு தீவில் விடப்பட்டார்கள். போட்டி ஆரம்பமாகி விட்டது. இரு இளைஞர்களும் ஆளில்லாத தீவுகளில் வசிக்க ஆரம்பித்தார்கள். இரண்டு தீவுகளிலும் எங்கேனும் செம்பழுப்பு நிறப்புகை எழும்புகிறதா என்று பார்த்தபடி எந்நேரமும் படகை எடுத்துச் செல்ல ஆயத்தமாக ஆட்கள் நியமிக்கப்பட்டார்கள். நாட்கள் ஓடின. மூன்று மாதம் முடிந்தது. படகுக்காரர்கள் ஏதேனும் தீவிலிருந்து புகை எழும்புகிறதா என்று உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு நாள், ஒரு தீவில் கடற்கரையிலிருந்து புகை எழும்பியது. உடனே ஒரு படகு புறப்பட்டுப் போய் அங்கே எலும்பும் தோலுமாக இருந்த இளைஞனை அழைத்து வந்தது. அவன் கரைக்கு வந்ததும், மற்றவன் இன்னும் வந்து சேரவில்லை என்பதை அறிந்து திடுக்கிட்டான். இருப்பினும் சுதாரித்துக்கொண்டு தலைவரிடம் சொன்னான்.

“தலைவா, எங்களுக்குக் கொடுக்கப்பட்ட சோளம் இரண்டு மாதத்திற்கு மட்டுமே போதுமானதாக இருந்தும் நான் சாமர்த்தியாக இத்தனை நாள் தாக்குப் பிடித்திருக்கிறேன். அவனும் என்னைப்போல தாக்குப் பிடித்திருப்பான் என்ற நம்பிக்கை எனக்கில்லை. எனவே ஓரிரு நாட்கள் பார்த்துவிட்டு எனக்கே பதவியைக் கொடுக்க வேண்டுகிறேன்“ என்றான்.

தலைவருக்கு அவன் சொன்னதைக்கேட்டு கொஞ்சம் அச்சம் உண்டாகிவிட்டது. இருந்தாலும் இன்னும் சிறிது நாட்கள் பொறுமையாக இருக்க முடிவு செய்தார். இன்னும் சிறிது நாட்கள் ஓடி மறைந்தன. நான்கு மாதங்கள் கழிந்துவிட்டன. தலைவருக்கு சந்தேகம் வலுத்துவிட்டது. தானே நேரில் சென்று பார்த்துவிட முடிவு செய்தார். படகோட்டியை அழைத்து ஒரு படகை எடுக்கச் சொன்னார். இரண்டு மணி நேரத்தில் படகு அந்தத் தீவை அடைந்துவிட்டது. அவனை உயிரோடு காணப்போகிறோமா அல்லது துஷ்ட மிருகங்கள் தின்று தீர்த்த எலும்புக் கூடாய்ப் பார்க்கப் போகிறோமா? என்ற அச்சத்தில் அவருக்கு நெஞ்சு படபடத்தது.

ஏனென்றால் தீவுகளுக்குச் சென்ற சிலர் பசியில் இறந்ததும் உண்டு. இந்தப் போட்டியை அறிவித்தது

**“நீ தடுமாறிப் போவாய் என்று எண்ணி இந்தப் போட்டியை வைத்தேன். நீயோ உன் அறிவாலும், உழைப்பாலும் என்னைத் திணறடித்து விட்டாய், காட்டுக்கு ஒரு நல்ல தலைவனைக் கொடுத்த கடவுளுக்கு நன்றி!**

கூட தவறோ என்று மனம் கலங்கினார். கொஞ்சதூரம் காட்டுக்குள் நடந்ததுமே தான் கண்ட காட்சியில் திடுக் கிட்டுப் போனார். ஆம், அங்கே மூங்கிலாலும், ஓலை களாலும் கட்டப்பட்ட அழகான வீடு அவர்களை வரவேற்றது. அதிலிருந்து அவர்கள் தேடி வந்த இளைஞன் ஓடிவந்தான். முன்பைவிட நல்ல புஷ்டியாக மாறியிருந்தான். தலைவரை வணங்கி வரவேற்றான். உள்ளே, வாருங்கள் தலைவா என்று அழைத்துச் சென்று அமர வைத்தான் உள்ளே ஓடிப்போய் சூடான சோள அடையும், மீனும் கொண்டு வந்து கொடுத்தான். தலைவருக்கோ ஒன்றும் புரியவில்லை.

“உனக்குக் கொடுக்கப்பட்ட சோளம் மூன்று மாதத்துக்குள் முடிந்திருக்குமே, நீ என்னவென்றால் அருமையான சோள அடையால் எங்களை வரவேற்கிறாய். நீயும் நன்கு சாப்பிட்டு கொழுத்திருக்கிறாய் இது எப்படி சாத்தியம் என்றார்.

கொஞ்சம் என்னோடு வாருங்கள் தலைவரே என்று அவன் அவரை வீட்டின் பின்புறம் அழைத்துச் சென்றான். அங்கே அழகான சோளக் கொல்லை ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. அவன் சொன்னான், தலைவா, நான் வந்த அன்றே எனது தானியத்திலிருந்து ஒரு பங்கை எடுத்து விதைத்து வைத்துவிட்டேன். இரண்டு மாதங்களிலேயே அறுவடைக்குத் தயாராகி விட்டது. நான் எந்தக் கவலையுமில்லாமல் நிறைவாகச் சாப்பிட்டேன். இந்த நான்கு மாதம் மட்டுமல்ல. இன்னும் எத்தனை வருடம் வேண்டுமென்றாலும் என்னால் இங்கே மகிழ்ச்சியாய் வாழ முடியும்“ என்றான்.

தலைவர் அவனைக் கட்டி அணைத்துக் கொண்டார். “நீ தடுமாறிப் போவாய் என்று எண்ணி இந்தப் போட்டியை வைத்தேன். நீயோ உன் அறிவாலும், உழைப்பாலும் என்னைத் திணறடித்து விட்டாய், காட்டுக்கு ஒரு நல்ல தலைவனைக் கொடுத்த கடவுளுக்கு நன்றி” என்றார்.

கையில் கொடுக்கப்பட்டதைத் திட்டமிட்டுப் பெருக்கிக் கொள்ளுகிறவர்களே ஜெயிக்கிறார்கள். அது பொருளாக இருந்தாலும், வாழ்க்கையானாலும், நேர மானாலும்..”

நன்றி: **பழனியப்பன்**



# இராமநாதபுரத்திலிருந்து புதுச்சேரிக்கு 5 மணிநேரத்தில் சென்ற ஆம்புலன்ஸ்!

ராமநாதபுரம் மாவட்டம், அழகன்குளம் பள்ளிவாசல் தெருவைச் சேர்ந்தவர் நயினா முகமது. வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார். அவருடைய மனைவி ஜெசிமா, இவர்களு டைய மகன் முகமது அமீர் (வயது 16) மலேசிய குடியுரிமை பெற்றுள்ள இவர், அங்கு படித்து வருகிறார்.

இந்த நிலையில் விடுமுறையில் ஊருக்கு வந்திருந்த முகமது அமீருக்கு கடந்த சில வாரங்களுக்கு முன்பு திடீரென முதுகு பகுதியில் கடுமையான வலி ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து அவரை ஆஸ்பத்திரியில் பரிசோதித்தபோது முதுகு தண்டு வடத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக டாக்டர்கள் தெரிவித்தனர். இதற்கான மருந்து மாத்திரைகள் கொடுத்து வந்தனர். ஆனால் நோய் குணமாகவில்லை.

கடுமையான வலி காரணமாக முகமது அமீர் கடந்த ஒரு மாதமாக வீட்டிலேயே படுத்தபடுக்கையாக இருந்துள்ளார். இந்த சூழ்நிலையில் நேற்று முன்தினம் முகமது அமீருக்கு மீண்டும் முதுகு வலி அதிகமான தால் உடனடியாக அவரை ராமநாதபுரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் கொண்டு சேர்த்தனர். அவரை பரிசோதித்த டாக்டர்கள் நோயின் தீவிரம் அதிகமாகி உள்ளதாகவும், 4 முதல் 5 மணி நேரத்திற்குள் புதுச்சேரியில் உள்ள ஜிப்மர் மருத்துவமனைக்கு கொண்டு சென்றால் அறுவை சிகிச்சை மூலம் உயிர் பிழைக்க வைக்க முடியும் என்றும் தெரிவித் துள்ளனர்.

மதுரை சென்று விமானம் மூலம் புதுச்சேரிக்கு செல்வதற்கு நேரம் அதிகமாகும் என்பதால் ஆம்புலன்ஸ் மூலம் சிறுவனை கொண்டு செல்ல முடிவு செய்யப்பட்டது. த.மு.மு.க.வின் ஆம்புலன்சில் முகமது அமீர் ஏற்றப்பட்டு உடனடியாக கொண்டு செல்லப்பட்டார். ஆம்புலன்ஸ் டிரைவர் ஜாஸ் என்பவர், சிறுவனுக்கு ஏற்பட்ட நிலையை உணர்ந்து மிகவும் விழிப்புடன் செயல் பட்டார்.

இதனால் வேகமாக அவர் புதுச்சேரியை நோக்கி ஆம்பு லன்சை ஓட்டினார். செல்லும் வழியில் முன் அறிவிப்பு செய்ததன் பயனாக த.மு.மு.க தொண்டர்கள் மற்றும் போக்கு வரத்து போலீசார் சாலையில் போக்குவரத்தை சரிசெய்து வழி ஏற்படுத்தி கொடுத்தனர்.

5 மணி நேரத்திற்கு முன்னதாகவே கொண்டு சென்று சேர்த்து, உரிய நேரத்தில் அறுவை சிகிச்சை மேற்கொண்டதால் முகமது அமீர் தற்போது நலமாக உள்ளதாக குடும்பத்தினர் தெரிவித்தனர். பொதுவாக ராமநாதபுரத்தில் இருந்து புதுச்சேரிக்கு மிதமான வேகத்தில் சென்றால் 9 முதல் 10 மணி நேரமாகும்.

ஆனால் சிறுவனை காப்பாற்ற மேற்கொண்ட முயற்சி யாலும், வழிநெடுகிலும் போலீசார் போக்கு வரத்தை ஒழுங்குபடுத் தியதாலும் 4 மணி நேரம் 50 நிமிடங்களில் கொண்டு செல்ல முடிந்ததாக ஆம்புலன்ஸ் ஊழியர்கள் தெரிவித்தனர்.

உரிய நேரத்தில் ஆஸ்பத்திரிக்கு சிறுவனை கொண்டு செல்ல உதவியவர்களுக்கு சிறுவனின் குடும்பத்தினர் நன்றி தெரிவித்துக்கொண்டனர். இதே போல் சமயோஜிதமாக செயல் பட்டு ஆம்புலன்சை ஓட்டிச்சென்ற டிரைவர் ஜாசுக்கும் பாராட்டு குவிந்து வருகிறது.

●

# அணு ஆய்விற்கு அடித்தளமிட்ட
# ஜான் டால்டன்

அணுகுண்டு, அணு உலை என்றால் என்னவென்று அனைத்து மக்களுக்கும் தற்போது தெரியும். ஆனால், அணு என்ற ஒன்று அறியப்படாத காலமும் இருந்தது. பொருள்கள் தொகுதிகளால் ஆனவை என்றே, பதினேழாம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவில் நம்பப் பட்டது. அந்தக் காலகட்டத்தில் 1766ம் ஆண்டு செப்டம்பர் 6ஆம் தேதி ஜான் டால்டன் என்பவர் இங்கிலாந்து நாட்டில், கம்பெர்லேண்ட் என்னும் மாகாணத்தில், காக்கர் மவுத் என்ற ஊருக்கு அருகிலுள்ள ஈகிள்ஸ்பீல்ட் என்ற இடத்தில் பிறந்தார். இவருடைய தந்தை ஒரு நெசவாளி. வளர்ந்து வரும் குழந்தைப் பருவத்தில் டால்டன் தந்தையிட மிருந்து தான் கல்வி கற்றார்.

ஊருக்கு அருகில் உள்ள பார்ஷா ஹால் என்ற கிராமத்தில் நண்பர்கள் கழகத்தைச் சேர்ந்த ஜான் பிடெட்சர் என்பவர் நடத்திக்கொண்டிருந்த பள்ளியில் டால்டன் சேர்க்கப்பட்டு கல்வி பயின்றார். இவருடைய பத்தாவது வயதில், நண்பர்கள் கழகம் ஒன்றை நடத்தி வந்த வசதிமிக்க எலிகுராபின்சன் என்ற செல்வந்தரிடம் பணிக்கு அனுப்பப்பட்டார். எலிகு ராபின்சன் மிகச் சிறந்த வானிலை அறிஞர். எனவே, அவரிட மிருந்து கணிதம் மற்றும் வானிலை பற்றிய பல்வேறு விவரங்களை கற்றுக்கொண்டார்.

1787ல் வானிலை நாள்காட்டி ஒன்றை உருவாக்கி, ஒவ்வொரு நாளும் வானிலை குறித்த பதிவுகளை இவர் மறையும் வரை தொடர்ந்து அதில் பதிவுகளை இட்டு, அக்குறிப்புகளைப் பாதுகாத்து வந்தார். கிட்டத்தட்ட 2 லட்சம் பதிவுகளை அதில் இவர் பதிவிட்டிருந்தார். வெளிக்காற்றோட்ட மண்டலத்தில் அதன் சுற்றோட்



**சிதம்பரம்,** இயற்பியல் ஆசிரியர் (ஓய்வு),
(அறிவியல் விழிப்புணர்வு பணிக்கு தேசிய விருது பெற்றவர்)

டம் என்ற ஜார்ஜ் ஹேட்லியின் கோட்பாட்டை ஆய்வு செய்து அதில் பல மாற்றங்களைச் செய்து புதிய கோட்பாட்டை உருவாக்கினார். 1793ல் வானிலை உற்றுநோக்கல் பற்றி கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பு நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார். இந்நூல் அக்காலத்திய பல அறிவியல் அறிஞர்களின் கவனத்தை ஈர்த்தது.

1794ல் மான் செஸ்டர் வந்தபோது மான்செஸ்டர் இலக்கிய, தத்துவக் கழகத்தில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது நிறங்களை உணரும் பார்வை குறித்த கட்டுரை ஒன்றை வெளியிட்டார். இதற்குக் காரணம் இவருடைய கண்களுக்கு நீலம், ஊதா முதலிய நிறங்கள் தெரிந்தாலும், அடுத்து வரும் பச்சை, மஞ்சள், ஆரஞ்சு நிறப்பட்டைகள் ஒன்று போலவே தெரிந்தது. தன்னுடைய பார்வையில் ஏதோ கோளாறு இருப்பதை உணர்ந்து கொண்டார். இக்குறைபாடு பற்றிய இவருடைய ஆய்வுக் கட்டுரை இப்படிக்கூட ஒரு பார்வைக்குறைபாடு இருக்கக்கூடுமா என்று மருத்துவ உலகினரைப் புருவம் உயர்த்த வைத்தது.

இவர் தன் விழியிலுள்ள திரவத்தை ஆராய்வதற்காகத்தான் இறந்தபின் தன்னுடைய விழியையும், விழித்திரையையும் ஆராய்ச்சிக்கு உட்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவ்வாறே இவருடைய மறைவுக்குப் பின்னர் இவருடைய விழிகள் தனியே எடுக்கப்பட்டு ஆராயப்பட்டன. விழித்திரவம் அக்குறைபாட்டின் காரணம் இல்லை என்று டால்டனின் நம்பிக்கைக்கு மாறாக ஆய்வு நிறுவப்பட்டாலும், அவரின் ஆய்வுக்கட்டுரை கண் மருத்துவத் துறையின் புதிய வாயிலைத் திறந்து வைத்தது. “நிறக்குருடு” என்ற இக்குறைபாடு டால்டனிசம் என்று இன்றளவும் அழைக்கப்படுகிறது.

கவலை வாயுக்களின் அமைப்பு, பல்வேறு வெப்ப நிலைகளில், வெற்றிடத்தில் மற்றும் வெளிக்காற்றில், வெளிப்படும் நீராவி மற்றும் பிற ஆவிகளின் அழுத்தங்களில் ஏற்படும் மாற்றம், வாயுக்களில் வெப்பத்தினால் ஏற்படும் விரிவு குறித்துப்பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டார். 1801ல் ஆங்கில இலக்கணத்தின் அடிப்படை என்ற நூலை எழுதி வெளியிட்டார். நீர் மற்றும் பல திரவங்கள் வாயுக்களை உட்கவர்தல் குறித்து இவர் ஆற்றிய உரைகள் பின்னர் டால்டன் விதிகளாக உருமாற்றம் பெற்றன.

பொருள்கள் பற்றி பல்வேறு அறிஞர்கள் பல விதமாகக் கூறினாலும், பொருள்கள் அணுக்களால் ஆனவை எனத் தீர்மானமாகக் கூறியவர் ஜான் டால்டன். இவர் வெளியிட்ட அணுக்கொள்கை பின்வருமாறு:

தனிமங்கள் அனைத்தும் அணு என்ற சிறிய துகள்களால் ஆனவை. ஒவ்வொரு தனிமத்தின் (எடுத்துக்காட்டு இரும்பு) வெவ்வேறு தனிமங்கள் (எ.கா.தாமிரம், ஆக்சிஜன், பாதரசம்), வெவ்வேறு அளவு நிறை கொண்டவை. அணுக்களை ஆக்கவோ, அழிக்கவோ, பிரிக்கவோ, முடியாது. (இக்கொள்கை தான் பின்னாளில் பொய்ப்பிக்கப்பட்டது).

வெவ்வேறு தனிமங்களின் அணுக்கள் வேதிச்சேர்மமாக மாறும்போது எளிய, முழு எண் விகிதங்களில் தான் ஒன்றிணைக்கின்றன. வேதிவினைகளின் போது அணுக்கள் ஒன்றிணைகின்றன, பிரிக்கப்படுகின்றன மற்றும் அழிக்கப்படுகின்றன.

டால்டன் அணுக்கொள்கையை வரையறுத்த பின் தான், அக்கொள்கை அணுவைப் பற்றிய பல்வேறு ஆய்வுகளுக்கு பின்னாளில் அடித்தளமாக அமைந்தது. இறுதி வரை திருமணம் செய்து கொள்ளாமல் தனிமையில் வாழ்ந்த இவர், தன்னுடைய வாழ்நாளில் 117 ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

1844ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 26ஆம் தேதி இரவு, நடுங்கும் கரங்களுடன் வானிலைக் குறிப்பை எழுதிக்கொண்டிருந்தவர் மறுநாள் 27ஆம் தேதி அதிகாலையில் படுக்கையிலிருந்து கீழே விழுந்து கிடந்தார். அவரைப் பரிசோதிக்கையில் அவருடைய உயிர் பிரிந்திருந்தது. பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெறாமல், அணு ஆய்வுக்கு அடித்தளமிட்ட, நிறக்குருட்டைப் போக்க வழிகாட்டிய வானிலைக் குறிப்புகளுக்கு நாட்காட்டி தந்த, வாயுக்களுக்கான விதிகளை உருவாக்கிய அந்த அறிஞரின் நினைவைப் போற்றுவோம்.

●

## அமெரிக்காவில் இந்தியப் பெண்ணுக்கு நீதிபதி பதவி

அமெரிக்காவின் கலிபோர்னியா ஷெரீன் மேத்யூஸ். இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்.

இவரை கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள தெற்கு மாவட்ட கோர்ட்டு நீதிபதி பதவிக்கு ஜனாதிபதி டிரம்ப் தேர்வு செய்துள்ளார். அமெரிக்க நாடாளுமன்றத்தின் செனட்சபை இதற்கு ஒப்புதல் வழங்கினால் ஷெரீன்மேத்யூஸ், கலிபோர்னியா தெற்கு மாவட்ட கோர்ட்டு நீதிபதியாக பொறுப்பு ஏற்பார்.

இது சாத்தியமானால் தெற்கு மாவட்ட நீதிபதியாக பணியாற்றும் முதல் இந்திய-அமெரிக்கர் மற்றும் முதல் ஆசிய பசிபிக் அமெரிக்கப் பெண் என்ற பெருமையை ஷெரீன் மேத்யூஸ் அடைவார்.

தற்போது ஷெரீன் மேத்யூஸ், சரண்டயாகோவில் உள்ள அமெரிக்காவின் 5-வது மிகப்பெரிய சட்ட நிறுவனத்தில் முக்கிய கூட்டாளியாக இருந்து வருகிறார்.

முன்னதாக கலிபோர்னியாவின் தெற்கு மாவட்டத்திற்கான அமெரிக்க வக்கீல் அலுவலகத்தின் குற்றவியல் பிரிவில் உதவி வக்கீலாக மேத்யூஸ் பணியாற்றி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஜோ.எஸ்தர் ரோஸ்லின் பி.இ.,**

1. சைவ சமயத்தின் தலைமை இடமான சிதம்பரத்தில் நந்தனார் கொலை செய்யப்பட்ட முறை என்ன? நந்தனார் செய்த தவறு என்ன?

2. வைணவ சமயத்தின் தலைமைக் கோவிலாகிய திருவரங்கத்தில் கொலை செய்யப்பட திருப்பாணாழ்வார் செய்த தவறு என்ன?

3. எந்தத் தவறும் செய்யாத நந்தனாரும் திருப்பாணாழ்வாரும் கொலை செய்யப்படக் காரணம் என்ன?

சிந்தனையுள்ள உலக மக்களே சிந்தித்துப் பாருங்கள்

**புனித தோமா வழித் தமிழர் சமயம்**

4. நந்தனார், திருவள்ளுவர் பரம்பரையைச் சேர்ந்தவர், திருவள்ளுவர் புனித தோமா வழித் தமிழர் சமயத்தைச் சேர்ந்தவர். இவை தக்க ஆராய்ச்சியின் வழி நிலை நாட்டப்பட்டுள்ள வரலாற்று உண்மைகள் ஆகும்.

5. இப்பொழுதும் மறுப்புக் கொடுக்க விரும்பும் ஆராய்ச்சி யாளர்கள் வரவேற்கப்படுகின் றார்கள். மறுக்க விரும்புகின்றவர் களின் அத்தனை கேள்விகளுக்கும், அவர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் பகுத்தறிவு வழியில் பதில் கொடுத்து நிலை நாட்டிக் காட்ட உலக சமயங்களை ஒன்றிணைக்கும் தமிழர் ஆன்ம வியல் அறக்கட் டளை ஆயத்தமாக இருக்கிறது.





"இந்து மதம்" என்னும் பெயரில் ஆரியப் பிராமணர்களின் பிடியில் தமிழர் சமயம், சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையாகிய இந்துத்துவா கொள்கையையுடைய ஆரியப் பிராமணர்களின் பிடியில் இப்பொ ழுது அடிமைப்பட்டுக் கிடக்கிறது.

7. புனித தோமா வழித் தமிழர் சமயமாகிய இந்து மதம், கி.பி. முதல் நூற்றாண்டில் உருவான காலத்தில், சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையா கிய மனுநூல் கொள்கை உலகில் உருவாகவே இல்லை என்பது வரலாறு.

# தமிழர் சமயத் தலைவர்களான நந்தனார், திருப்பாணாழ்வார் வரலாற்றாய்வு

## தமிழர் ஆன்மவியில் அறக்கட்டளை

**[பதிவு எண்: 345/2014]**

பிராமணர்களின் மனுநூல் கொள்கை உருவாகிப் பரவிய காலம்

8. கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.12ஆம் நூற்றாண்டு வரை, வட இந்தியாவின் பெரும்பகுதி "ஆரிய தேசம்" என்று அழைக்கப்பட்டது. ஆரியர்களால் ஆளப்பட்ட காலத்தில், ஆரிய தேசத்தில் மனித நேயத்திற்கு எதிரான கொள்கையாகிய மனுநூல் கொள்கை, ஆரியப் பிராமணர்களால் உருவாக்கப்பட்டது. "ஆரியர் பிராமணர்" என்பது ஸ்மிருதியாகிய மனுநூலைப் பின்பற்றும் ஸ்மார்த்தப் பிராமணர்களைக் குறிக்கிறது.

9. கி.பி. 7ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் ஆரியப் பிராமணர்கள் ஆரிய தேசத்திலிருந்து, தமிழ்நாடு வந்து தமிழ்நாட்டில் குடியிருந்தனர் என்பது ஆதிசங்கரர் என்னும் பிராமணர் கி.பி.9ஆம் நூற்றாண்டிணல் தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகிய சேர நாட்டிலுள்ள காலடியில் பிறந்து வளர்ந்து அத்வைதக் கொள்கையின் வழி மனுநூல் கொள்கையைப் பரப்பியமையை வெளிப்படுத்துகிறது.

ஆரியப் பிராமணராகிய ஆதிசங்கரர் செய்த, தமிழர் சமயத்திற்கு எதிரான சதி

10. தமிழர் சமயங்களான சைவ வைணவ சமயங்களை, ஆரியப் பிராமணர்களின் சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையான மனுநூல் கொள்கைக்கு அடிமைப் படுத்த, சைவச்சின்னமாகிய திருநீற்றை நெற்றியில் பூசிக்கொண்டும் வைணவப் பெயரான நாராயணா என்று வாயினால் கூறிக்கொண்டும் வஞ்சகமாக, தமிழ் இனத்தையும், தமிழர் சமயங்களையும் அடிமைப் படுத்தி அத்வைதக் கொள்கையை ஆதிசங்கரர் வெளிப்படுத்தினார் என்பது வரலாறு.

அர்த்தசாஸ்திர முறையில் பெண்கள் பிராமணர்களால் பயன்படுத்தப்பட்டமை

11. அத்வைதக் கொள்கையை அவர் வெளிப்படுத்திய வுடன், தமிழ்நாட்டை ஆட்சி செய்து வந்த தமிழ் அரசர்கள், அதை ஏற்றுக்கொண்டு ஆரியப் பிராமணர்களுக்கு ஆதரவாக மாறி விடுவார்களா? என்னும் கேள்வி நியாயமானதேயாகும்.

12. ஆட்சியாளர்களைத் தங்கள் பக்கம் சாயுமாறு செய்வதற்கு ஆரியர்களுக்கு, அவர்களால் பாராட்டப் படும், அர்த்தசாஸ்திரம் கற்றுக்கொடுக்கிறது, எவ்வாறு?

13. ஒரு நாட்டை ஆட்சி செய்வது அந்த நாட்டின் அரசன், அரசர்கள், பொதுவாக பல மனைவிகளுடனும் திருமணமாகாமல் சேர்த்து வைத்துக்கொள்ளும் மறுமனையாட்டிகளுடனும் வாழ்வது உலக நாடுகளின் பொது இயல்பு.

14. இந்தப் பொது இயல்பைப் பயன்படுத்தி, வெள்ளைத் தோலுடைய அழகான பெண்கள் என நம்பப்படும் தங்கள் குடும்பங்களிலுள்ள பெண்களுக்கு ஆண்களைக் கவரக்கூடிய இசை, நடனம், நளினமான பேச்சு முதலியவற்றில் பயிற்சி கொடுத்து ஆயத்தம் செய்கின்றனர்.

15. ஆட்சியில் இருக்கும் தலைவர்களிடம் அனுப்பப்படும் பிராமணப் பெண்கள் தங்களுக்கு இடப்பட்ட பணியைத் தங்கள் சமுதாயத்திற்குச் செய்யும் தொண்டாக நம்பித்திறம்படச் செய்து முடிக்கின்றனர்.

16. தங்களுக்கு இடப்பட்ட பணியை முடித்து வீடு திரும்பும் பெண்களுக்கு, அவர்கள் தலையில் நீர் தெளித்துத் தீட்டுக் கழித்துத் தீட்டுத் தீர்ந்து விட்டதென்னும் நம்பிக்கையை ஏற்படுத்துகின்றனர்.

17. சில பெண்கள், ஆட்சியாளனிடம் மனைவி போல தங்கியிருந்து பிராமணர் கொள்கையை ஏற்றுச் செயல்படும் கருவியாக ஆட்சியாளனை மாற்றும் பொறுப்பைச் செயல்படுத்தும் கருவியாக அனுப்பப்படுகின்றனர்.

18. இந்தப் பணியைப் பிராமணர்கள் இன்றும் பல நாடுகளில் செயல்படுத்தி வருகின்றனர்.

19. இதனால் வருணாசிரம அதர்மமாகிய மனுநூல் கொள்கை பிராமணர்களால் அழியாமல் பாதுகாக்கப் படுவதுடன், உலகில் பல நாடுகளில் பல்வேறு கோணங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பிராமணர்களின் சதி இன்றும் செயல்பட்டு வருகிறது. எவ்வாறு?

இன்றும் செயல்பட்டு வருவதை 1994 ஆகஸ்டு 15ஆம் நாளிட்ட, மத்தியப் பிரதேச பாலக்காட் பிராமண சமாஜம் வெளியிட்டுள்ள இரகசிய சுற்றறிக்கையின் 13ஆம் பக்கம் வெளிப்படுத்துகிறது. அது வருமாறு:

"To save Braghminism, the Ladies of Brahmins should coe forward and it is necessary that Brahmin Ladies should Sacrifice, to protect Brahminism. If one Lady comes forward to protect Brahmin, they will get "Punya" on the basis of Mansumith."

பக்கம். 60 சங்கரமடத்திற்கு 108 கேள்விகள் டாக்டர் மு. தெய்வநாயகம் இரண்டாம் பதிப்பு 1997.

இந்த நூல் காஞ்சி சங்கரமடத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டு, சங்கர மடத்தின் பதில் எதிர் பார்க்கப்பட்டது.

நாம் எழுதிய முதல் கடிதத்திற்குப் பதில் கொடுத்து மாட்டிக்கொண்ட சங்கர மடம். அதன் பின்னர் அமைதி காத்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பிராமணப் பெண்களை அழைத்து சுற்றறிக்கை வெளியிட்ட மத்தியப் பிரதேச, பாலக்காட் பிராமண

சங்கம் இருந்த இடத்திற்கு நாம் சென்று, அந்தத் தொகுதி எம்.பி.யின் துணையுடன், பிராமணர்களின் சுற்றறிக்கை தவறானது எனவும், நம்மோடு கலந்துரையாடல் நடத்த பிராமணர் சமாஜத்தை அழைத்தும் கூட்டம் நடத்தினோம். பிராமணர்கள் பதுங்கிக் கொண்டனர்.

அந்த எம்.பி. பகுஜன் சமாஜ் கட்சியைச் சேர்ந்தவர். பகுஜன் சமாஜ் கட்சியின் நிறுவனரான கான்சிராம் நமது நெருங்கிய நண்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

20. பிராமணர்களின் இந்தக் கொடிய சதி வலையில், தமிழ்நாடும், தமிழ் இன மக்களும் ஆதிசங்கரர் காலம் முதல், இன்று வரை சிக்கித் தவித்து வருகின்றனர்.

**இருளின் காலம் முடிவடைந்து ஒளியின் காலம் தொடங்கி விட்டது.**

21. நந்தனாரும், திருப்பாணாழ்வாரும் கொல்லப் பட்டது முதல் இன்று வரையில் ஆரியப் பிராமணர்களின் சதிவலையில் புனித தோமா வழித் தமிழர் சமயமாகிய இந்து மதம் சிக்கித் தவித்து வருகிறது. நந்தனார் பரம்பரையினரும், தீண்டத்தகாத கீழ்ச்சாதியினர் என முத்திரை குத்தப்பட்டு பல்வேறு வகைகளிலும் இழிவையும் துன்பத்தையும் அடைந்து வருகின்றார்கள்.

22. இந்த இழிநிலையிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் இந்த மக்களை விடுவிக்கும் காலத்தைக் கடவுள் நமக்குக் கட்டளையிட்டு நடத்தி வருவதை, இந்தப் பணியில் கடவுளால் ஈடுபடுத்தப்பட்டுச் செயல்பட்டு வரும் கடவுளின் அடியவர்கள், தெளிவாக உணர்ந்து மற்றவர்களுக்கும் தெரிவித்துத் தாமும் செயல்பட்ட வருகின்றார்கள்.

23. இருள் நிறைந்த காலம் முடிவடைந்து ஒளியில் மகிழும் காலம், வந்து விட்டது. "தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும், தருமன் மறுபடியும் வெல்லும்" என்பது உண்மையே.

**மேலே கூறப்பட்டுள்ளவற்றைத் தொகுத்து நோக்கினால்,**

1. இன்று இந்து மதம் என்னும் பெயரில் இருக்கும் புனித தோமா வழித் தமிழர் சமயம், பறையர் குடியில் பிறந்த திரவள்ளுவர் காலம் முதல் நந்தனார் காலம் வரை பறையர் குடியில் பிறந்த ஆன்மீகத் தலைவர்களின் தலைமையில் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தது.

2. கி.பி. 9ஆம் நூற்றாண்டில் அத்வைதக் கொள்கையை உருவாக்கிய ஆதிசங்கரராகிய ஸ்மிருதியாகிய மனுநூலைப் பின்பற்றும் ஸ்மார்த்தப் பிராமணர் காலத்திற்குப் பின்னர், பறையர் குடியில் பிறந்து புனித தோமா வழித் தமிழர் சமயமாகிய இந்து மதத்திற்குத் தலைமை தாங்கி வந்த நந்தனார் கொல்லப்பட்டு, இந்து மதம் ஆரியப் பிராமணர்களால் சதி முறையில் அபகரிக்கப்பட்டது.

3. பறையர் குடியில் பிறந்த, இன்றைய இந்து மதத்தின் ஆன்மீகத் தலைவர்களாய் இருந்த பறையர் குடிப்பெருமக்கள், தீண்டத்தகாத கீழ் சாதியினர் என்று முத்திரை குத்தப்பட்டு, அவமானத்திற்கும் துன்பங் களுக்கும், ஒடுக்கப்படுதலுக்கும் உள்ளாக்கப்பட்டும் பாதிக்கப்பட்டும் வருகின்றனர்.

4. இதுவரை மறைக்கப்பட்டு, மறைந்து கிடக்கும் பறையர் குடியின் வரலாறு, வெளியே கொண்டு வரப்பட்டு, பறையர் குடியின் மிகச் சிறந்த ஆன்மீக வரலாறு உலகுக்கு அறிவிக்கப்படுகிறது.

5. பறையர் குடியின் அடிமைத்தளைகள், கடவுளின் வழி நடத்துதலால் உடைத்து எறியப்படுகின்றன.

6. இது பறையர் குடி மக்களின் எழுச்சிக் காலமாக வெளிப்படுகிறது. பறையர் குடி மக்களின் எழுச்சி, தமிழ் இனத்திற்கும், தமிழ் மொழிக்கும், தமிழர் சமயத்திற்கும் விடுதலையைக் கொண்டு வருகிறது. கடவுளின் வழி நடத்துதலால் இருள் மறைந்து ஒளி எழுகிறது.

**கள்ள உறவு கிரிமினல் குற்றம் இல்லை உச்ச நீதிமன்றத் தீர்ப்பு**

1. உச்ச நீதிமன்றம் ஒரு உச்சிக் குடுமி மன்றம். அதாவது ஆரியப் பிராமணர்கள் நிறைந்திருக்கும் மன்றம். அவர்களின் குடும்ப வாழ்க்கை முறையை மேலே கண்டோம். மேலே கூறப்பட்டுள்ள அவர்களுடைய குடும்ப வாழ்க்கை முறையை நியாயப்படுத்தி, 27.09.2018 அன்று, "கள்ள உறவு, கிரிமினல் குற்றம் இல்லை" என்று அவர்களுடைய குடும்பப் பெண்களுக்குச் சட்ட அங்கீகாரம் கொடுத்துள்ளனர்.

ஆரியப் பிராமணர்களுக்குத் தேவை அரசு அதிகாரம். இந்த நிலை தமிழர் ஆன்மீகத்தக்கு எதிரானது. நல்ல பிள்ளைகளைப் பெற்று வளர்க்கும் குடும்ப வாழ்க்கையை முற்றிலும் அழிப்பது. கடவுளின் பிள்ளைகளால் கண்டிக்கத்தக்கது. அரசியல் வேறு, ஆன்மீகம் வேறு.

**சாத்தானுடன் இருப்பவர்கள்**

2. இப்பேரண்டத்தை ஆளும் கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்பதைத் தமிழர் ஆன்மவியல் பகுத்தறிவு வழியில் நிலை நாட்டிக் காட்டுகிறது. அப்படியானால் கடவுளின் முன்னர் ஸ்மார்த்தப் பிராமணர்களின் நிலை என்ன? என்னும் கேள்வி எழுகின்றது. "நானே கடவுள்" (அகம் பிரம்மாஸ்மி) எனக் கூறும் ஸ்மார்த்தர்கள், கடவுளின் படைப்பை எதிர்க்கும், பேய் அல்லது சாத்தான் என்று ஆகிவிடுகிறது. "நானே கடவுள்" என்னும் ஆணவத்தையுடைய ஸ்மார்த்த பிராமணர்களின் ஆதரவாளர்கள் உள்ளத்தில் மற்ற மக்களை இழிவுபடுத்தும் நானே "மேல் ஜாதி" என்னும்

ஆணவத் தைப் புகுத்தி, அவர்களையும் பேய் நிலை அல்லது சாத்தான் நிலைக்கு உள்ளாக்கி விடுகிறார்கள். மறுப்பவர்களை வரவேற்கின்றோம். இதனால் ஸ்மார்த்தப் பிராமணர்களும், அவர்களுடைய ஆதரவாளர்களும் சாத்தானோடு சாத்தான் இருக்கும் இடத்தில் இருக்கப் போகிறவர்கள் என்பதில் ஐயம் இல்லை.

**கூலிப்படையாக்க விரும்புகின்றவர்கள்**

3. இன்றும் தமிழர் சமயத்தின் ஆன்மீகத் தலைவர்களாகிய பறையர் குடிப் பெருமக்களை, தங்கள் பகைவர்களை அடக்க கூலிப்படை அடியாட்களாகப் பயன்படுத்தி இழிவுபடுத்த எண்ணிச் செயல்படும் பிராமணர்களைத் திருத்தும் கடமை கடவுளின் பிள்ளைகளுக்கு இருக்கிறது. பிராமணர்கள் திருந்து வார்களா? காலம் பதில் சொல்லும். (பிராமணர் களுக்கும் கடவுள் மனச்சாட்சியைக் கொடுத்திருக் கின்றார். மனச்சாட்சியின்படி நடக்கும் மிக மிகச் சில நல்ல பிராமணர்களையும் விதி விலக்குகளாக நாம் கண்டு வருகின்றோம்)

**கேட்பார் புறப்பட்டு விட்டனர்**

4. “பார்ப்பானுக்கு மூத்த பறையன் கேட்பாரில் லாமல் கீழ்சாதி ஆனான்“ என்பது பழமொழி. கேட்கும் அரசன் இல்லை என்பது பழமொழியின் உட்கருத்து. இப்பொழுது அரசன் தேவை இல்லை. இந்தியா மக்களாட்சி நாடு. இதனால் அநியாயத்தைத் தட்டிக் கேட்க மக்கள் புறப்பட்டு விட்டார்கள்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள வரலாறு அனைத்தும், இவற்றை மறுக்க நினைக்கும் அறிஞர் பெருமக்களுக்கு தக்க ஆதாரங்களுடன் அவர்கள் ஏற்றுக் கொள்ளும் அளவில் பகுத்தறிவு வழியில் நிலைநாட்டிக் காட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## விளம்பர கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ. 7,000/- (முழுப்பக்கம்)**

**பின்னட்டை உள்ளே ரூ. 7,000/- (முழுப்பக்கம்)**

**பின்னட்டை ரூ. 10,000/- (முழுப்பக்கம்)**

**கருப்புவெள்ளை ரூ. 5,000/-**

# ஆதார் எண் மூலம் பண பரிமாற்ற சேவை




இந்திய தபால் துறை வங்கி (இந்தியா போஸ்ட் பேமென்ட்ஸ் வங்கி) தொடங்கி ஓராண்டு நிறை வடைந்து உள்ளது. இதையொட்டி ஆதார் எண் மூலம் பண பரிமாற்ற சேவைகள் தொடக்க விழா சென்னை அண்ணாசாலையில் உள்ள தலைமை தபால் நிலையத்தில் நடந்தது. இந்த சேவையை தமிழ்நாடு வட்ட தபால் துறை தலைவர் சம்பத் தொடங்கி வைத் துப் பேசினார்.

தபால் அலுவலகங்கள் மூலம் கடைக்கோடி மக்க ளுக்கும் வங்கி சேவைகள் எளிதில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டு உள்ளது. 1 லட்சத்து 36 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தபால் நிலையங்கள் சேவை மையங்களாக மாற்றியதன் மூலம் கிராமப்புற வங்கி கட்டமைப்பு 2.5 சதவீதம் அதிகரித்து உள்ளது.

இதற்காக 21/2 லட்சம் தபால்காரர்களுக்கு வங்கிச் சேவை சார்ந்த பயிற்சிகளும் அளிக்கப்பட்டு உள்ளன. இதன் மூலம் நாடு முழுவதும் 4 ஆயிரத்து 100 கிராமங்கள் முழுவதும் டிஜிட்டல் மயமாக மாற்றப் பட்டு உள்ளது. கடந்த ஒரு ஆண்டில் 1 கோடிக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் தபால் வங்கி மூலம் ரூ.5 ஆயிரம் கோடிக்கும் மேல் பண பரிமாற்றம் செய்துள்ளனர். 20 லட்சம் பேர் செல்போன் செயலியை பதிவிறக்கம் செய்து பயன்படுத்தி வருகின்றனர்.

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் 11 ஆயிரத்து 121க்கும் மேற்பட்ட வங்கி சேவை மையங்கள் உள்ளன. இதில் 8 ஆயிரத்து 580 மையங்கள் கிராமங் களில் அமைக்கப்பட்டு உள்ளன. 21 ஆயிரத்து 465 பயிற்சி பெற்ற ஊழியர்கள், வாடிக்கையாளர்களின் வீட்டு வாசலில் வங்கிச் சேவை அளிக்கத் தயாராக உள்ளனர். தமிழகத்தில் 443 கிராமங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு, தமிழ்நாடு மண்டலம் முதல் 3 இடங் களுக்குள் வந்துள்ளது. தமிழகத்தில் 3 லட்சத்து 93 ஆயிரத்து 880 சேமிப்பு மற்றும் நடப்பு கணக்குகள் தொடங்கப்பட்டு உள்ளன.

அன்னியரின் ஆதிக்கத்தில் இருந்து இந்தியத்தை விடுதலையை நோக்கி நகர்த்திய அவர், மறுபுறம் சொந்த நாட்டினரால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு போடப்பட்டு இருந்த அடிமை விலங்கொடிக்கவும் பாடுபட்டார்.

இதில் தலித் பிரிவினர் கோவிலுக்குள் நுழையும் உரிமைக்காக போராடியது முக்கியமானது. இந்த வழிபாடு பாகுபாட்டை அவரே ஒருமுறை அனுபவித்தும் இருந்தார். அது கடந்த 1925ஆம் ஆண்டு நடந்தது.

அந்த ஆண்டு அவர் புகழ்பெற்ற தென்னிந்திய சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். இதன் ஒரு பகுதியாக அன்றைய திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் கீழ் இருந்த கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலுக்குச் சென்றிருந்தார். அங்கு முதலில் கோவிலைச் சுற்றி வந்த அவர், பின்னர் கோவிலுக்குள் செல்ல முயன்றார்.

ஆனால், அவரை கோவிலுக்குள் செல்லவிடாமல் நிருவாகிகள் தடுத்து நிறுத்தினர். காந்தியடிகள் ஏற்கனவே இங்கிலாந்து சென்றிருந்தால், அவரை உள்ளே அனுமதிக்க முடியாது என மறுத்து விட்டனர்.

இந்துக்கள் கடல் கடந்து வெளிநாட்டுக்கு செல்வது தீட்டானது எனக் கருதும் வழக்கம் அந்தக் காலத்தில் இருந்தது. இந்த வழக்கத்தை மீறுபவர்கள் கோவிலுக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். அவ்வாறு கடல்கடந்து சென்று திரும்புபவர்கள் பரிகார பூசைகள் செய்த பின்னரே கோவிலுக்குள் அனுமதிக்கப்படும் நிலை இருந்தது. இதனால்தான் காந்தியடிகள் கோவிலுக்குள் அனுமதிக்கப்படவில்லை.

இதனால் கடும் அதிருப்தியும் அதிர்ச்சியும் அடைந்த அவர், இந்தச் சம்பவம் குறித்து தனது நவஜீவன் பத்திரிகையில் வேதனையுடன் கட்டுரை ஒன்றை எழுதினார்.

1925ஆம் ஆண்டு மார்ச் 29ஆம் தேதி வந்த அந்தக் கட்டுரையில், இந்த வழக்கம் பழங்காலத்தில் இருந்தே பின்பற்றப்படுகிறதா? வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவர் கோவிலுக்குள் செல்வதால் கன்னியாகுமரியை மாசுபடுத்த முடியுமா? இதை எப்படி சகிக்க முடியும்? என்று ஆவேசமாக கேள்விகளும் எழுப்பி இருந்தார்.

இந்த வழக்கம் ஒரு பாவச் செயல் என்றும் கூறியிருந்த காந்தியடிகள், இந்த களங்கத்தை நீக்க வேண்டியது ஒவ்வொரு இந்துவின் கடமையாகும் என்றும் அழைப்பு விடுத்திருந்தார்.

அவர் கூறியவாறே இந்த வழக்கம் விரைவில் முடிவுக்கும் வந்தது. திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் புகழ்பெற்ற மகாராஜா ஸ்ரீ சித்திரை திருநாள் பாலராம வர்மா, வெளிநாட்டுப் பயணத்தை முன் வைத்து கோவிலுக்குள் நுழைய போடப்பட்டிருந்த தடையை விலக்கினார். அத்துடன் தாழ்த்தப்பட்டவர்கள் கோவிலுக்குள் செல்லும் உரிமையையும் அவர் வழங்கினார்.

அதன்படி திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் கீழ் இருந்து இந்துக் கோவில்களில் தாழ்த்தப்பட்டவர்களை அனுமதிக்கும் பிரகடனத்தை 1937ஆம் ஆண்டு அவர் வெளியிட்டார். 1937ஆம் ஆண்டு நடந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிகழ்ச்சிக்கு காந்தியடிகளையும் சிறப்பு விருந்தினராக அவர் அழைத்திருந்தார்.

இந்த நிகழ்ச்சி குறித்து கேளராவைச் சேர்ந்த சுதந்திரப் போராட்டத் தியாகியும், காந்தியவாதியுமான 106 வயதான அய்யப்பன் பிள்ளை கூறுகையில், அந்த நிகழ்ச்சி இன்றும் எனக்கு நினைவில் இருக்கிறது. திருவனந்தபுரம் பல்கலைக்கழக மைதானத்தில் நடந்த அந்த நிகழ்ச்சியில் காந்தியடிகளும் பங்கேற்றார். பின்னர் அவர் தாழ்த்தப்பட்ட மக்களை அழைத்துக் கொண்டு கோவில்களுக்குள் நுழைந்தார் என்று உற்சாகமாகத் தெரிவித்தார்

திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் கீழ் அப்போது 1526 கோவில்கள் இருந்தது குறிப்பிடத்தக்கது.



# காந்திக்கு கன்னியாகுமரியில் நுழையத் தடை!

# ஆந்திர முதல்வரின் அதிரடிகள்!

ஜெகன் மோகன் அரசு, புதிய நிருவாக நடைமுறையாக, கிராமங்களில் கிராம செயலகத்தையும், நகர்புறங்களில் வார்டு செயலகத்தையும் உருவாக்குகிறது. இந்தச் செயலகங்களில் 500 வகையான பொதுச் சேவைகள் வழங்கப்படும். கிராமப்புறங்களில், பஞ்சாயத்து ராஜ், ஊரக மேம்பாடு, வருவாய், மருத்துவம், சுகாதாரம், கால்நடை பராமரிப்பு, மின்சாரம், வேளாண்மை, சமூக நலம் ஆகியவை தொடர்பான சேவைகளும், நகர்ப்புறங்களில் நகராட்சி தொடர்பான சேவைகளும் வழங்கப்படும்.

இங்கு பணியாற்றுவதற்கான நிரந்தர ஊழியர்களை தேர்வு செய்வதற்காக, கடந்த 1ஆம் நாள்முதல் 8ஆம் நாள் வரை ஆந்திர மாநில அரசு எழுத்துத் தேர்வு நடத்தியது. தேர்வுக்கு 21 இலட்சம் பேர் விண்ணப்பித்து இருந்தனர். ஆனால், 19 லட்சத்து 50 ஆயிரம் பேர் மட்டுமே தேர்வு எழுதினர். அவர்களின் ஒரு இலட்சத்து 98 ஆயிரத்து 164 பேர் தகுதி பெற்றனர். அவர்களில் ஒரு லட்சத்து இருபத்தாறாயிரத்து 726 பேருக்கு பணி வழங்கப்பட்டுள்ளது. இவர்களின் நகர்ப்புறங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டவர்கள் 31 ஆயிரத்து 640 பேர் ஆவர்.

இந்நிலையில், ஒரு லட்சத்து 26ஆயிரத்து 728 பேருக்கும் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. விஜயவாடாவில் நடந்த நிகழ்ச்சியில் முதல் அமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி, நியமன ஆணைகள் வழங்கும் பணியைத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில் ஒரே நேரத்தில் இத்தனை பேருக்கு நிரந்தர அரசு வேலை வழங்கப்பட்டது, இந்தியாவிலேயே இதுதான் முதல்முறை என்று பெருமிதமாகக் கூறினார்.

ஒரே நேரத்தில் இவ்வளவு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டதுடன், வெறும் இரண்டே மாதங்களில் இவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சாதனை, வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும். ஊழல் இல்லாமல் அரசு சேவைகள் பொதுமக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். இதை ஒரு வேலையாக மட்டும் கருதாமல் சேவையாகக் கருத வேண்டும். இந்தத் திட்டத்தின் செயல்பாடு குறித்து அவ்வப்போது தணிக்கை செய்யப்படும். அதன் மூலம் வெளிப்படைத் தன்மை உறுதி செய்யப்படும். காலியாக உள்ள அரசுப் பணியிடங்களை நிரப்ப இனிமேல் ஆண்டுதோறும் ஜனவரி 1ஆம் நாள் முதல் 31ஆம் நாள் வரை தேர்வு நடத்தப்படும் என்று முதலமைச்சர் ஜெகன் கூறினார்.

ஆந்திரா முழுவதும் 11ஆயிரத்து 158 கிராமச் செயலகங்களும், 3 ஆயிரத்து 786 வார்டு செயலகங்களும் திறக்கப்படுகின்றன. டிசம்பர் மாதம் முதலாவது வாரத்தில் இருந்து இவைகள் செயல்படத் தொடங்கும். ஒவ்வொரு செயலகத்திலும் 10 முதல் 12 ஊழியர்கள் இருப்பார்கள். மேலும், பெண்களின் பாதுகாப்பு மற்றும் உளவியல் ஆலோசனைக்காக ஒரு பெண் போலீசும், பெண்கள் நல உதவியாளரும் இருப்பார்கள். இங்குள்ள பணியாளர்களுக்கு உதவுவதற்காக கிராம, வார்டு தன்னார்வத் தொண்டர்களும் இருப்பார்கள். அந்த தொண்டர்கள் பணிக்கு 2 லட்சத்து 80 ஆயிரம் பேர் ஏற்கனவே நியமிக்கப்பட்டு உள்ளனர்.

**க. பவானி எம்.ஏ.,**



# கண்டங்கத்திரி
## மருத்துவ பயன்கள்



கண்டங்கத்தரி என்பது செடி வகையைச் சேர்ந்தது. தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் குப்பை மேடு, கரிசல் மண், செம்மண், வண்டல் மண் போன்ற இடங்களில் மானாவாரியாக வளரக்கூடியது.

செடி முழுவதும் முட்கள் இருக்கும். இதன் பூக்கள் நீல நிறத்தில் பூக்கும். சிறிய கத்தரிக்காய் வடிவிலான காய் காய்க்கும். பழுத்ததும் மஞ்கள் நிறமாக இருக்கும். கத்தரிக்காய் வகைகளில் ஒன்றான இதன் இலை, பூ, காய், பழம், விதை, பட்டை, வேர் என ஒவ்வொன்றும் மருத்துவ குணம் உடையவை.

பழத்தை உணவாக எடுத்துக் கொண்டால் ரத்த அழுத்தம் சீராகும். கண்டங்கத்தரிப் பழத்தை உலர்த்தி, நெருப்பில் சுட்டு, பொடியாக்கி, ஆடாதொடை இலைகளில் வைத்துச் சுருட்டு போலச் செய்து புகை பிடிக்க பல்வலி, பல் கூச்சம் தீரும். கண்டங்கத்தரிப் பழங்கள் மற்றும் தண்டுகள் நுண்ணுயிர்களை எதிர்க்கும் மருத்துவ பண்பு கொண்டவை. கண்டங்கத்தரி இலையை இடித்துச் சாறு எடுத்த அதனுடன் சம அளவு நல்லெண்ணெய் சேர்த்து காய்ச்சி. தலைவலி, வாத நோய்களுக்குப் பூசி வர குணம் கிடைக்கும்.

பொதுவாக முட்கள் நிறைந்த மூலிகைகள் சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்களைக் குணப்படுத்தும் வல்லமை கொண்டவை. எனவே, கண்டங்கத்தரி, தூதுவளை, ஆடாதொடை ஆகிய மூலிகசை செடிகளில் இலைகளை சம அளவு எடுத்து நிழலில் காயவைத்துப் பொடியாக்கவும். இந்தப் பொடியை தினமும் இருவேளை ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து தேனில் குழைத்துச் சாப்பிட்டு வந்தால் சுவாசம் சம்பந்தப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளும் தீரும்.

வறட்டு இருமலுக்கு கண்டங்கத்தரி வேர் 30 கிராம், சுக்கு 5 கிராம், சீரகம் 5 கிராம், கொத்தமல்லி 1 பிடி ஆகியவற்றை 2 லிட்டர் நீரில் போட்டு கொதிக்க வைத்து அரை லிட்டராக காய்ச்சி 4 முதல் 6 முறை 100 மில்லி வீதம் குடிக்க சீதளக் காய்ச்சல், சளிக்காய்ச்சல், நுரையீரல் காய்ச்சல் உள்ளிட்ட அனைத்துச் சுரங்களும் நீங்கும். இலையை அடித்துச் சாறு எடுத்து அதனுடன் சம அளவு தேங்காய் எண்ணெய் சேர்த்து பக்குவமாக காய்ச்சி வடித்து உடலில் தேய்த்து வர வேர்வை நாற்றம் அகலும்.

பாத வெடிப்புக்கு இலையை இடித்து சாறுடன் ஆளி விதை எண்ணெய் சம அளவு கலந்து பக்குவமாக காய்ச்சி பூசி வர வெடிப்பு மறையும். உடல் உஷ்ணம் காரணமாக சிறுநீர் பாதையில் எரிச்சலும் கடுப்பும் உண்டாகலாம். கண்டங்கத்தரி இலையை அம்மியில் வைத்து நைத்து சாறு எடுத்து, அதில் ஒன்றரைத் தேக்கரண்டி அளவு எடுத்த அதனுடன் ஒரு தேக்கரண்டி அளவு தேன் சேர்த்துச் சாப்பிட்டால் இரண்டு மணி நேரத்தில் எரிச்சல், கடுப்பு நீங்கும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் நாள்பட்ட இருமலுக்கு கண்டங்கத்தரி பழத்தை உலர்த்தி பொடி செய்து தேனுடன் கலந்து 2 வேளை கொடுக்க குணமாகும். கண்டங்கத்தரி வேர், ஆடாதொடை வேர், சுக்கு, திப்பிலி, ஓமம் போன்றவற்றை இடித்து பாத்திரத்தில் போட்டு தண்ணீர் ஊற்றி சுண்டக்காய்ச்சி, காலை, மாலை குடித்த வர கபம் சம்பந்தமான நோய்கள் குணமாகும்.

கண்டங்கத்தரி பழத்தை மண் பாண்டத்தில் போட்டு தண்ணீர் விட்டு வேக வைத்து குழம்பு பதமாக இருக்கும் போது ஒரு பங்கு நல்லெண்ணெய் ஊற்றி மெழுகு பதம் வர காய்ச்சி வடித்துக் கொள்ளவும். இந்தக் கலவையை வெண் குஷ்டத்திற்கு தடவி வர குணம் கிடைக்கும் என சித்த மருத்துவக் குறிப்புகளில் கூறப்பட்டுள்ளது.

**- ஜெயவேல்**



# பறவைகளின் அரசன் கழுகு

கழுகு என்பது அக்சிபிட்ரிடே என்னும் பறவைக் குடும்பத்தைச் சேர்ந்த வலுவான பெரிய கொன்றுண்ணிப் பறவை ஆகும். பறவைகளின் அரசன் என்ற சிறப்பு பெறுகிறது கழுகு. அதிகாரம், சுதந்திரம், மேன்மை ஆகியவற்றின் அடையாளமாகவும் கருதப்படுகிறது.

உலகம் முழுவதும் கழுகுகள் பரவலாகக் காணப் படுகின்றன. பெரும்பாலும் பழைய உலகம் என்று சொல்லப்படும் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பாவில் தான் அதிகம் காணப்படுகின்றன. கழுகுகளில் மொத்தம் 74 இனங்கள் உள்ளன. ஆனாலும், அவற்றுள் 60 இனங்கள் யூரேஷியா, ஆப்பிரிக்கப் பகுதிகளில் காணப்படுகின்றன. பொதுவாக கழுகுகள் நான்கு வகையாக பிரிக்கப் படுகின்றன. அவை, 1. கடல் கழுகுகள், 2. கால் வரை, ரோமம் உள்ள கழுகுகள் 3. பாம்பு உண்ணும் கழுகுகள், 4. ராட்சச காட்டு கழுகுகள்.

கழுகு இனத்தை சேர்ந்த பறவைகள் தமிழில் எழால், கழுகு, கங்கு, கங்கம், கூளி, பருந்து, பணவை, பாறு, கருடன், கிருஷ்ண் பருந்து, செம்பருந்து, பூகம் வல்லூறு என அழைக்கப்படுகின்றன.

பறவை இனத்திலேயே கழுகு மட்டும்தான் 70 ஆண்டு ஆயுட்காலம் வாழக்கூடியது. பறவை இனத்தில் அதிக உயரம் பறக்க கூடியவை. பெண் கழுகு, ஆண் கழுகை விட சற்றுப் பெரிதாக இருக்கும். பெண் கழுகு, ஆண் கழுகின் மீது பரீட்சையின் பின்பே நம்பிக்கை வைக்கும்.

பெண் கழுகு ஓர் ஆண் கழுகை சந்தித்து உறவு கொள்ளும் முன், அந்த ஆண் கழுகுடன் நிலத்திற்குச் சென்று சிறு தடி போன்ற குச்சியை எடுக்கும். பின்பு மேலே ஆணுடன் உயரத்திற்குப் பறந்து சென்று அந்தக் குச்சியினைக் கீழே போட்டுவிட்டு காத்து கொண்டிருக்கும். நிலத்தை நோக்கி விழுந்து கொண்டிருக்கும் குச்சியை ஆண் கழுகு விரட்டிச் சென்று? அது நிலத்தில் விழும்முன் பிடித்து, அதை உயரப்பறக்கும் பெண் கழுகிடம் சேர்க்கும். பெண் கழுகு மீண்டும் குச்சியைக் கீழே போட்டுவிடும். ஆண் கழுகு பிடிப்பதற்காக கீழே செல்லும். இவ்வாறு குச்சியை வீழ்த்துவதும், எடுத்து வருவது மாக பல மணி நேர பரீட்சை நடைபெறும்., பெண் கழுகு? ஆண் கழுகிடமுள்ள

**முனைவர் வே. ஞானப்பிரகாசம்,**
**முன்னாள் துணைவேந்தர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்.**

பொறுப்புணர்வை நிச்சயப்படுத்திக் கொண்டதும், அது உறவு கொள்ள இடமளிக்கும்.

கழுகு மிக உயரமான முட்களை உடைய மரக் கிளைகளில் அல்லது மலைச்சரிவுகளில், பாறை பிளவு களில், மற்ற உயிரினங்கள் எளிதில் நெருங்க முடியாத இடத்தில் கூடு கட்டும். இடம் தேர்வானதும் ஆண் கழுகு முள், குச்சி, புல், வேர்கள், சிறு கற்கல் மற்றும் வைக்கோல் வைத்து லாவகமாக கூடுகட்டும். பின் பெண் கழுகு முட்டையிட்டு அடைகாத்து குஞ்சு பொறிக்கும். ஒருமுறை இரண்டு முட்டைகள் இடுகின் றன. முதலில் பொறித்து வெளிவரும் அல்லது பெரிய குஞ்சு தன் இளவலைக் கொத்திக் கொன்றுவிடும். இவ்வாறாக ஆதிக்கம் செலுத்தும் குஞ்சானது பொது வாகப் பெண்ணாக இருக்கும். ஏனென்றால் பெண் குஞ்சு, ஆண் குஞ்சை விட பெரியது. இந்த படுகொலை யைத் தடுக்க அவற்றின் பெற்றோர் கழுகுகள் எந்த முயற்சியும் எடுப்பதில்லை. எதிரிகளைத் தாக்கவும், தன்னுடைய முட்டைகளைப் பாதுகாக்கவும் ஆபத்து நேரங்களில் உடலில் இருக்கிற கந்தக அமிலத்தைக் கழுகுகள் உமிழ்கின்றன. கந்தக அமிலம் எந்த ஓர் உயிரினத்தின் மீது பட்டாலும் கருகிவிடும்.

கழுகு குஞ்சுகள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை கூட்டில் வைக்கப்பட்டு, தாய்பறவை உணவு ஊட்டும், பிறகு மென்மையான கூட்டினை நீக்கிவிட்டு முட்கள் குச்சுகளை குத்துவது போல வைக்கும். இதனால் கூட்டின் ஓரத்திற்கு வரும் குஞ்சுகளை, கீழே தள்ளி விடும். குஞ்சுகள் நிலை தடுமாறி விழப்போகும் போது, இறக்கைகளை விரித்து பறக்கமுயலும். ஆனால் பறக்க முடியாது. குஞ்சுகள் கீழே விழுந்து அடிபடாமல் ஆண் கழுகு பறந்து சென்று தன் முதுகில் தாங்கி, மீண்டும் கூட்டிற்கு கொண்டு வந்து சேர்க்கும். இதுபோல் தொடர்ந்து பயிற்சியளிக்கப்பட்டு குஞ்சு களை பறக்க வைத்து இரைத்தேடும்.

எலி, கோழி, மீன்கள், முயல், பாம்பு போன்றவற்றை விரும்பி உண்ணும் மாமிச உண்ணி கழுகு ஆகும். இறந்தவற்றை உண்ணாது. கழுகு புதிதான இரையி னையே உண்ணும். இவை மிக அபாரமான பார்வைத் திறனைக் கொண்டுள்ளன. ஆயிரம் அடி உயரத்தில் பறந்தாலும், தரையில் ஓடும் ஒரு முயலைக் கண்டு வேட்டையாட முடியும்.

கழுகு தன் 40 வயதை அடையும்போது, அதன் அலகு இரையைப் பிடிப்பதற்கும் உண்பதற்கும் பயனற்றதாகி விடும். அதன் அலகும் வளைந்து விடும். அதன் இறக்கைகளும் தடித்து, பறப்பதற்குக் கனமாக மாறிவிடும். இந்த நிலையில், ஒன்று இறப்பது அல்லது வலிமிக்க நிகழ்ச்சிக்கு தன்னையே உட்படுத்துவது இவை தான் கழுகுக்கு இருக்கும் இரண்டு வாய்ப்புகள்.

இந்தக் காலத்தில் கழுகு உயர்ந்த மலைக்குப் பறந்து சென்று அங்கிருக்கும் பாறையில் தன் அலகைக் கொண்டு வேகமாக மோதி அலகை உடைக்கும். புதிய அலகு வளரும் வரை, தான் கூட்டிலேயே தனித் திருக் கும். புதிய அலகு வளர்ந்த பின் இறகுகளைத் தானே பிய்த்தெடுக்கும். ஐந்து மாதங்களுக்குப் பின், புதிய இறகுகள் முளைக்க ஆரம்பிக்கும். இந்த மாற்றத் துக்குச் சுமார் 150 நாட்கள் ஆகும். அத்தனை நாட்கள் காத்திருந்து, வலியை அனுபவித்து, மறுபிறவி அடைந்த கழுகு இன்னும் 30 ஆண்டுகள் வாழத் தகுதியுள்ளதாக மாறும்.

கழுகுகள் புயலை விரும்புகின்றன. புயல் காற்றின் மூலம் அவை மேகங்களுக்கு மேலாக எளிதில் பறக்க முடிகிறது. கழுகுகள் மணிக்கு 32 கிலோ மீட்டர் வேகம் பிறக்கும் திறன் உடையவை. கழுகுகளின் இறக்கைகள் ஒரு ஆகாய விமானத்தின் இறக்கைகளை விட வலிமை வாய்ந்தது. குதிரைகள் நின்றுகொண்டு தூங்குவது போல, கழுகுகள் மரக்கிளையில் உட்கார்ந்து கொண்டே துங்கும் திறன் கொண்டவை. கழுகுகள் மிகவும் புத்திசாலித்தனம் கொண்டவை. ஆமை, நத்தை போன்றவற்றை உண்ணும் போது அவற்றின் ஓடுகள் உடையும் வண்ணம், அவைகளை மலை உச்சியில் இருந்து பாறை மேல் வீசி எறிந்து, பின் உண்ணும். உலகின் மிகப்பெரிய கழுகான பிலிப்பைன்ஸ் நாட்டு கழுகு களின் இறக்கை எட்டு அடி நீளம் உள்ளவை. அவை ஒரு ஆட்டையோ அல்லது ஒரு மானையோ தூக்கி செல்லும் திறன் உடையவை.

உலகில் கழுகு இனம் வெகுவேகமாக அழிந்து வருகிறது. சுற்றுச்சூழல் மாசடைதலை தடுப்பதில் கழுகுகளுக்கு முக்கியமான இடமுண்டு. உலகில் இந்தியா உள்பட சில நாடுகளில் கழுகுகளைத் தெய்வ மாகக் கருதி வழிபடுகின்றனர். காடுகளை அழித்து விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் போது, பயிர்ச் செய்கையை நாசம் செய்யும் எலி மற்றும் சிறிய விலங்கு களை அழிப்பதற்காக விவசாயிகள் நச்சுப் பொருட் களை உபயோகிக்கின்றனர். இவற்றை உண்ணும் கழுகுகள் நச்சுத்தாக்கத்துக்கு உள்ளாகி இறக்க நேரிடு கிறது.

இன்னொரு காரணம் மின்சாரக் கம்பிகள் அதிகரிப்பதாகும். அனேகமான கழுகுள் மின் கம்பியில் மோதி அதன் தாக்கத்துக்குள்ளாகி இறக்கின்றன. இது பெரிய பிரச்சினையாக உருவெடுத்ததை அடுத்து அபாயத்தை எதிர்நோக்கும் உயிரினங்கள் பட்டியலில் கழுகும் சேர்க்கப்பட்டதோடு அதனைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. பிணந் தின்னிக் கழுகுகளை சங்கத்தமிழ் நூல்கள் பாறு என்று குறிப்பிடுகின்றன. சென்னைக்கு அருகில் உள்ள திருக்கழுக்குன்றம் கோவிலுக்கு ஒரு ஜோடி பாறுக் கழுகுகள் 20 ஆண்டுகளுக்கு முன்புவரை, தினசரி வந்து இரை எடுத்துச் சென்றிருக்கின்றன.

ஆனால், இப்போது வருவதில்லை. இந்த பாறு தற்போது நீலகிரி யையும், அதைச்சுற்றிய பகுதி களிலுமே எஞ்சியுள்ளது. இப்பறவைகளின் அழிவுக்கு அடிப்படைக் காரணம் டைக்ளோஃபினாக் எனப்படும் வலிநிவாரணி (மூட்டுவலி, தசைவலி களுக்கு வெளியில் தடவும் மருந்தாக இப்போதும் இதை நான் பயன் படுத்திக் கொண்டுதான் இருக்கிறோம்) எனக் கூறுகின்றனர். இந்த மருந்து கால்நடைகளுக்கு ஊசி மூலம் செலுத்தப்படுகிறது.. ●



# கீழடி அகழாய்வு உண்மைகள்

தமிழரின் நாகரிகம் உலகில் முற்பட்டது என்பதோடு இனி இந்திய வரலாற்றைத் தெற்கில் இருந்து வடக்கு நோக்கிப் பார்க்க வேண்டும் என்பதை சிவகங்கை மாவட்ட கீழடி அகழாய்வுகள் உறுதிப்படுத்திக் கொண்டு வருகின்றன. இந்த ஆய்வில் கிடைக்கும் பொருட்கள், தடயங்கள், கட்டுமானங்கள் ஆகியவை தமிழ்ச் சமுதாயத்தின் மிகச்சிறந்த நாகரிகத்தை வெளிக் கொணர்ந்து ஒவ்வொருவரையும் வியக்க வைக்கின்றன. தமிழ்ச் சமுதாயத்தின் மதிப்பை, கீழடி அகழாய்வுகள் மேலேடுத்துச் செல்கின்றன.

தமிழக தொல்லியல் துறையின் “கீழடி வைகை நதிக்கரையில் சங்க கால நகர நாகரிகம்“ என்ற புத்தகத்தை (4ஆம் கட்ட ஆய்வின் தொகுப்பு) தொல்லியல்துறை அமைச்சர் க. பாண்டியராசன் சென்னையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் வெளியிட்டார். அதில் இடம் பெற்று இருக்கும் தகவல்கள், கீழடியில் காணப்படும் அகழாய்வு ஆதாரங்களின்படி தமிழர்களின் பண்பாடு 2,600 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக உணரப்படுகிறது. நான்காம் கட்ட ஆய்வில் சேகரிக்கப்பட்ட 6 கரிம மாதிரிகள், அமெரிக்காவில் உள்ள பீட்டா பகுப்பாய்வு சோதனைக்கூடத்திற்கு அனுப்பப்பட்டு இரந்தன. அந்த மாதிரிகளில் 353 செ.மீ, ஆழத்தில் கிடைக்கப் பெற்ற கரிமத்தில் காலம் கி.மு.580 என்று ஆதாரம் கிடைத்துள்ளது. எனவே கி.மு. 6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 1ஆம் நூற்றாண்டு வரை கீழடி வளமான பண்பாடு கொண்ட பகுதியாக விளங்கியிருக்கலாம் என்ற கருத்துக்குள் வர ஏதுவாக உள்ளது.

தமிழகத்தின் நகர்மயமாதல் கி.மு. 3ஆம் நூற்றாண்டு கால கட்டத்தில்தான் தொடங்கியதாகக் கருதப்பட்ட நிலையில், தற்போது கிடைத்து வரும் சான்றுகள் மூலம் வைகை நதியைச் சுற்றி நகரம் உருவாகியது கி. மு. 6ஆம் நூற்றாண்டில் இருந்தே தொடங்குகிறது என்பதை தெளிவாக்குகிறது. வரலாற்றுச் சான்றுகளின்படி ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கங்கை சமவெளிப் பகுதியிலும் இதே காலகட்டத்தில்தான் நகர் மயமாதல் தொடங்கியது.

கீழடி அகழ்வாய்வில் கிடைத்த அறிவியல் ரீதியான சான்றுகள், தமிழ் பிராமி காலம் மேலும் நூாண்டுகள் பழமையானதாக கருதச் செய்கிறது. இவையெல்லாம் கி.மு. 6ஆம் நூற்றாண்டில் இருந்த தமிழ்ச் சமுதாயம் எழுத்தறிவு பெற்ற சமூகமாக விளங்கியிருக்கிறது. அதாவது 2600 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள்

எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்பதைச் சுட்டிக்காட்டி மெய்சிலிர்க்கச் செய்கிறது.

கீழடி அகழாய்வில் 70 எலும்புத் துண்டுகளின் மாதிரிகள் கிடைத்தன. இவற்றை மராட்டிய மாநிலம் புனேயில் உள்ள டாக்கான் கல்லூரிக்கு அனுப்பி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவை, திமிலுள்ள காளை, எருமை, வெள்ளாடு, கலைமான், காட்டுப்பன்றி, மயில் ஆகிய உயிரினங்களுக்கானவை என்பது அடையாளம் காணப்பட்டன.

காளை, எருமை, வெள்ளாடு போன்ற விலங்கினங்கள் அவர்களின் வேளாண்மைக்கு உறுதுணையாக இருந்துள்ளன என்று உணரப்படுகிறது. அதே நேரத்தில் கலைமான், வெள்ளாடு, காட்டுப்பன்றி போன்ற விலங்குகளின் எலும்புத் துண்டு மாதிரிகளில் வெட்டுக் காயத் தழும்புகள் காணப்படுவதால், அவை உணவுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

ஆக, சங்ககால சமூகம் வேளாண்மையை முதன்மைத் தொழிலாகக் கொண்டதோடு, கால்நடை வளர்ப்பையும் மேற்கொண்டிருந்தது வெளிக் கொணரப்பட்டுள்ளது.

கீழடி அகழாய்வில் கிடைத்த செங்கற்கள், சுண்ணாம்புச் சாந்து, கூரை ஓடுகள், சுடுமண் உறைகிணறு ஆகியவற்றின் மாதிரிகள், வேலூர் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துக்கு பகுப்பாய்வுக்காக அனுப்பப்பட்டன. அந்தக் கட்டுமானங்களில் சிலிக்கா, மண், சுண்ணாம்பு, இரும்பு, அலுமினியம், மெக்னீசியம் போன்ற கனிமங்கள் கலந்திருக்கின்றன. அந்தக் கலவை பற்றிய விரிவான அறிக்கை பெறப்பட்டது.

செங்கல், முற்றம் கூரை ஓடுகளில் 80 விழுக் காட்டிற்கும் அதிகமாக சிலிக்காவும், பிணைப்புக் காரணியாக 7 விழுக்காடு சுண்ணாம்பு கலந்துள்ளதும் தெரிய வந்துள்ளது. அதோடு, சுண்ணாம்புச் சாந்தில் 97 சதவீதம் சுண்ணாம்பைப் பயன்படுத்தியுள்ளனர். இது, அக்கால மக்கள் மிகத்தரமான கட்டுமானப் பொருட்களை பயன்படுத்தியதை அறியச் செய்கிறது.

4, 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த சிந்துவெளி வரிவடிவங்கள்தான் இந்தியாவில் கிடைக்கப் பெற்ற தொன்மையான வரிவடிவங்களாகும். சிந்துவெளி பண்பாடு மறைந்ததற்கும், தமிழ் பிராமி எழுத்துக்கள் தோன்றியதற்கும் இடைப்பட்ட காலத்தில் ஒரு வரிவடிவம் இருந்தது. அதை கீறல்கள் மற்றும் குறியீடுகள் என்று ஆராய்ச்சியாளர்கள் அழைக்கின்றனர்.

ஆனால் இவற்றை சாதாரணக் கீறல்களாக புறந்தள்ள முடியாது. ஏனென்றால், சிந்துவெளி வரிவடிவத்தைத் தொடர்ந்து, தமிழ் பிராமி எழுத்துகளின் முன்னோடியாக அவை இருக்கலாம் என்ற கருத்தும்



உண்டு. இவற்றைப் படித்தறிதல் முழுமை பெற வில்லை. தமிழ் பிராமிக்கு முந்தைய வடிவங்களான இந்தக் குறியீடுகள், பெருங்கற்காலம், இரும்புக் காலம் ஆகியவற்றில் வாழ்ந்த மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் எழுத்து வடிவங்க ளாகும். கீழடி அகழாய்வில் கிடைத்த கீறல்கள் பொறித்த 1,001 பானை ஓடுகள், இரும்புக் காலம் தொட்டு இப்பகுதியில் மக்கள் வாழ்ந்து வருகின்ற னர் என்பதை உணர்த்துவதாக அமைந்துள்ளன.



குறியீடுகளுக்கு அடுத்ததாகக் கிடைக்கும் வரி வடிவம், தமிழ் பிராமி எழுத்து வடிவமாகும். இந்த எழுத்தை தமிழி என்று பண்டைத் தமிழ் எழுத்துகள் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கீழடி அகழ் வாய்வில் தமிழ் பிராமி எழுத்து பொறிக்கப்பட்ட 56 பானை ஓடுகள் சேகரிப்பப் பட்டள்ளன. தமிழ் பிராமி எழுத்துகளில் கவிரன், ஆத(ன்) என்ற ஆட்களின் பெயர்களும், முழுமை பெறாத சில எழுத்துகளுடன் கூடிய உடைந்த பானை ஓடுகளும் கிடைத்துள்ளன.

தமிழ் பிராமி எழுத்துகள், பானையின் கழுத்துப் பகுதியின் கீழ் பொறிக்கப்பட்டுள்ளன. பானை வனையும் போதோ, ஈர நிலையில் எழுதுவதோ அல்லது பானை உலர்ந்த பிறகு கூரிய பொருளைக் கொண்ட எழுதுவதோதான் மரபு. கீழடியில் கண்டெடுக்கப்பட்ட பானைகளில் உலர்ந்த பின்பு பொறிக்கப்பட்ட எழுத்துகள் போலவே காணப்படு கின்றன. இவற்றை பானையின் உரிமையார்கள் பொறித்திருக்க வாய்ப்புள்ளது. எனவே, கி.மு. 6ஆம் நூற்றாண்டிலேயே மக்கள் எழுத்தறிவு பெற்றவர்களாக இருந்திருக்கின்றனர் என்பது உறுதி.

கீழடி அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட 17 பானை ஓடுகளில் உள்ள கனிமங்களைக் கண்ட றிவதற் காக இத்தாலியில் உள்ள பைச பல்கலைக் கழகத்தின் புவி அறிவியல் துறைக்கு அவை அனுப்பி வைக்கப் பட்டன. தண்ணீர் பிடித்து வைக்கவும், சமையலுக்கும் பானைகள், தனித்த வனைவுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உள்ளூரிலேயே செய்யப்பட்டது என்பது, உள்ளூர் மண் மாதிரியை வைத்து உறுதி செய்யப்பட் டது.

கீழடியில் பானை ஓடுகள் குவியல் குவியலாகக் கிடைப்பதால் அங்க பானை வனையும் தொழில்கூடம் இருந்திருக்க வேண்டும் என்றும் எண்ணத் தோன்று கிறது. அங்கு கிடைத்த கருப்பு, சிவப்பு நிறப்பானை ஓடுகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இப்படிப்பட்ட பானைகளைச் செய்வதில் சிவப்பு நிறத்துக்காக ஹேமடைட் என்ற இரும்பு தாதுப் பொருளையும், கருப்பு நிறத்துக்கு கரியையும் பயன்படுத்தி இருப்பது தெரிய வந்தது.

இப்படிப்பட்ட பானைகளை 1,100 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையில் சுட்டு உருவாக்கியுள்ளனர். இதற் கான தனித்தன்மை வாய்ந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இருக்கின்றனர். ரோம நாட்டு அரிட் டைன் பானை ஓடுகள் கிடைத்திருப்பதால், அந்த நாட்டு வணிகர்களும் இங்கு வந்திருக்கலாம் என்பதை வெளிப்படுத்துகிறது.

கீழடியில் நூல் நூற்கப் பயன்படும் தக்களி, துணிகளில் வரைவதற்கு பயன்படுத்தப்படும் எலும்பி லான கூரிய முனைகள் கொண்ட வரைகோல், தறியில் தொங்கவிடப்படும் கருங்கல், சுடுமணலினால் செய்யப்பட்ட குண்டு, செம்பு ஊசி, சுடுமண் பாத்திரம் ஆகியவையும் கண்டெடுக்கப்பட்டன. இவை சாயத் தொழிலுக்கான சான்றுகளாகும். நெசவுத் தொழில் அங்கு சிறந்து விளங்கியதும் தெரிய வருகிறது.

மேலும், தங்கத்திலான ஏழு ஆபரணத் துண்டுகள், செம்பு அணிகலன்கள், கல்மணிகள், கண்ணாடி மணிகள், நேர்த்தியாக செய்யப்பட்ட வீட்டு உபயோகப் பொருட்கள் ஆகியவை, சங்ககால மக்கள் வளமையு டன் வாழ்ந்ததற்குச் சான்றாக அமைந்துள்ளன.

அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட ஆட்டக்காய்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் அன்றைய சமுதாயத்தின் வாழ்க்கை முறையை எடுத்துக் காட்டு கின்றன. வட்டச்சில்லுகள் (பாண்டி, நொண்டி விளை யாட்டுகளில் பயன்படுபவை), தாயம் விளையாட்டுக் கான பகடைக்காய், வண்டி இழுக்கும் விளையாட்டுக் கான வண்டிச் சக்கரங்கள், சதுரங்கக் காய்கள் போன்றவை கிடைத்துள்ளன.

சுடுமண் உருவங்களான 13 மனித உருவங்கள், 3 விலங்கு உருவங்கள், விளையாட்டுப் பொருட்கள், காதணிகள், வளையல்கள், அணிகலங்கள், தங்கம், செம்பு, இரும்பு போன்ற உலோக தொல்பொருள் கிடைத்திருந்தாலும், வழிபாடு தொடர்பான தொல் பொருள் எதுவும் தெளிவான முறையில் கிடைக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**சைதை மணிமாறன்**



## பாகிஸ்தானம் உளவு அமைப்பிடம் இருந்து பணம்?

மத்திய பிரதேச முன்னாள் முதல்–மந்திரியும், காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவருமான திக்விஜய் சிங், செய்தியாளர்களிடம் பேசும்போது பா.ஜனதா மற்றும் பஜ்ரங்தள் அமைப்பு மீது குற்றம் சாட்டினார்.

அவர் கூறுகையில், பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.க்காக இந்தியாவில் முஸ்லிம்களை விட முஸ்லிம் அல்லாதவர்கள்தான் அதிகம் உளவு பார்க்கிறார்கள். இதை நினைவில் கொள்ளுங்கள். பஜ்ரங்தளம் மற்றும் பா.ஜனதா கட்சி ஆகியவை ஐ.எஸ்.ஐ.யிடம் இருந்து பணம் பெறு கின்றன. இதில் கவனம் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டு இருந்தார்.

திக்விஜய் சிங்கின் இந்த கருத்து சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது. இதற்கு பா.ஜனதா தலைவர்களில் ஒருவரும், மத்திய பிரதேச முன்னாள் முதல்–மந்திரியுமான சிவராஜ்சிங் சவுகான் பதிலடி கொடுத்தார். பா.ஜனதா மற்றும் சங்பரிவார் அமைப்புகளின் தேசப்பற்றுக்கு ஒருவரும் சான்றிதழ் வழங்கத் தேவையில்லை என கூறிய அவர். இத்தகைய கருத்துகள் மூலம் திக்விஜய் சிங் நம்பகத்தன்மையை இழந்து விட்டார் எனவும் குறைகூறினார்.

இந்த நிலையில் பஜ்ரங்தளம் மற்றும் பா.ஜனதா ஐ.டி.பிரிவைச் சேர்ந்த சிலர் ஐ.எஸ்.ஐ.யிடம் இருந்து பணம் வாங்கியதற்காக கைது செய்யப்பட்டனர் என்றுதான் கூறியதாகவும் பா.ஜனதா பணம் வாங்குவதாக கூறவில்லை என்றும் டுவிட்டார் தளத்தில் திக்விஜய் சிங் குறிப்பிட்டு இருந்தார்.

மிதமான கசப்புச் சுவை கொண்ட சுண்டைக்காய், நிறைய நன்மைகளை உள்ளடக்கிய இயற்கையின் அருட்கொடை. ஆயுர்வேதம், சித்த மருத்துவத்தில் மருந்துப் பொருளாக பயன்படுத்தப்படுகிறது.

கல்லீரல், நுரையீரல் மற்றும் நரம்பு தொடர்பான பிரச்சினை உள்ளவர்களுக்கு பரிந்துரைக்கப்படும் உணவு களில் இது காட்டாயம் இடம் பெற்றிருக்கும். மாலைக்கண் நோயாளிகளுக்குக்கூட சுண்டைக்காய் சேர்க்கப்பட்ட மருந்துகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

சர்க்கரை நோய், இதயப் பாதிப்பு, இரத்த அழுத்தம் போன்ற நோய்ப் பாதிப்பு இருப்பவர்கள் வாரத்தில் இரண்டு நாட்களாவது சுண்டைக்காய் சேர்த்துக் கொள்ள வேண்டும். பெரும்பாலும் புளிக்குழம்பு, சாம்பார் போன்றவற்றில் சுண்டைக்காய் சேர்ப்பார்கள். அவற்றில் அதிக பட்சம் பயத்து சுண்டைக்காய்களைத்தான் சாப்பிடுவோம். ஆனால் பொரிய லாக எடுத்துக் கொள்ளும்போது அளவு அதிகமாகும் சுண்டைக்காய் பொரியலில் கசப்புச் சுவை அதிகம் தெரியாது. அதனால் தயக்கமில்லாமல் சாப்பிடலாம்.

புரதம், கால்சியம், இரும்புச்சத்து நிறைந்த சுண்டைக்காய் உடல் வளர்ச்சிக்கு உதவும். வாரம் இரண்டு முறை இதைச் சாப்பிட்டால், ரத்தம் சுத்திகரிக்கப்படும். உடல் சோர்வு நீங்கும். செரிமான கோளாறுகளை நீக்குவதுடன், குடலையும் சுத்த மாக்கும். குடற்புழுக்களை வெளியேற்றும். வறட்டு இருமல், சளிப்பிரச்சினைகளைப் போக்க இது உதவும். சிறுநீரக நோயாளிகளுக்கு உகந்த மருத்துவ உணவு இது.

ரத்தத்தில் உள்ள சிவப்பணுக்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டா மலிருக்க உதவும். அதனால், ரத்தம் உறைதல் பிரச்சினை தடுக்கப்படும். இதய நோயாளிகள், அடிக்கடி உணவில் சுண்டைக்காய்ச் சேர்த்துக் கொள்வது நல்லது.

கால்சியம் சத்து அதிகம் இருப்பதால், பல் தொடர்பான பிரச்சினைகளுக்கும் மருந்தாக இருக்கும். காய்ந்த சுண்டைக் காய்ப் பொடியில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகம். வாரம் இருமுறை இந்தப் பொடியை சோற்றில் கலந்து சாப்பிடலாம். இரும்புச்சத்து நிறைந்தது என்பதால், கர்ப்பிணிகள், தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கும் ஏற்றது. ஒழுங்கற்ற மாதவிடாய்ப் பிரச்சினைகளை சுண்டைக்காய் சரிசெய்யும் என்றும், இன்சுலின் பயன்படுத்தாத சர்க்கரை நோயாளிகள் சுண்டைக்காயை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

**- ம. வில்லியம் எபனேசர்**



வீட்டுமனை பட்டா வழங்குவது தொடர்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை கூடுதல் தலைமை செயலாளர் அதுல்ய மிஸ்ரா வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது:

நீர்நிலைகள் போன்ற ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் வசிக்கும் ஏழைகளுக்கு நிரந்தர வீடு வழங்க வேண்டும் என்பதற்காகவும், இத்தகைய நிலங்களை ஆக்கிரமிப்பில் இருந்து மீட்டெடுத்து உரிய செயல்பாட்டுக்கு உட்படுத்துவதற்காகவும் சம்பந்தப்பட்ட கிராமங்களில் வருவாய்த்துறையின் மூலமாக தனியார் நிலங்களை கையகப்படுத்தி, ஏழை குடும்பங்களுக்கு வீட்டுமனை பட்டாவை சில நெறிமுறைகளுக்கு உட்பட்டு இலவசமாக வழங்கும் ஒரு சிறப்பு திட்டத்தை 201819 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் துணை முதல் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அறிவித்தார்.

அதேபோல ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் 5 ஆண்டுகளுக்கும் மேலான குடியிருப்பு ஆக்கிரமிப்புகளை சில நெறிமுறைகளுக்கு உட்பட்டு, தகுதியான பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாவை இலவசமாக வழங்கும் ஒருசிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தை செயல்படுத்தவும் அரசாணை வெளியிடப்பட்டது.

இந்த நிலையில் இத்திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டதில் ஆட்சேபனையற்றதாக கண்டறியப்பட்ட சுமார் 1 லட்சத்து 26 ஆயிரத்து 66 இனங்களில் இதுவரை 19 ஆயிரத்து 501 இனங்களில் மட்டுமே வரன்முறைப் படுத்தப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

ஆட்சேபனைக்குரிய புறம்போக்கு நிலங்களில் மாற்று இடம் கண்டறிந்து வீட்டுமனை பட்டா வழங்கி, ஆக்கிரமிப்புகளை அகற்றி ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களை மீட்டெடுத்து அதன் தன்மை மாறாமல் பயன்படுத்தும் பணியில் போதிய முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதையும் கருத்தில் கொண்டு, இத்திட்டங்களை சீரமைத்து மேலும் கால அவகாசம் வழங்கி செயல்பாட்டை தீவிரப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

அதன்படி, சில நெறிமுறைகளுக்கு உட்பட்டு இத்திட்டங்களை செயல்படுத்த அரசு ஆணையிடுகிறது. அதன் விவரம் வருமாறு:

கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள அரசு, உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான அனைத்து புறம்போக்கு நிலங்களிலும் உள்ள குடியிருப்பு ஆக்கிரமிப்புகள் மாவட்ட நிர்வாகம் அரசு நிலப்பதிவேட்டில் பதிவு செய்த விவரங்களின் அடிப்படையில் ஆக்கிரமிப்பு விவரங்களை தொகுத்து கணினியில் பதிவு செய்ய வேண்டும். அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுவரை கணக்கெடுப்பு முடிக்காமல் இருந்தால் ஆக்கிரமிப்பு விவரங்களை தொகுத்து கணினியில் பதிவு செய்ய வேண்டும்.

சென்னை மாநகர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் சென்னை மாநகர் சூழ் பகுதிகளிலும், இதர மாநகராட்சி பகுதிகளிலும் ஆட்சேபனைக்குரிய மற்றும் ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள குடியிருப்பு ஆக்கிரமிப்புகள் பற்றிய விவரங்களை மாவட்ட நிர்வாகம் அரசு நிலப்பதிவேடு

# இலவச வீட்டுமனை பட்டா யாருக்கு வழங்க வேண்டும்?

# பட்டா வாங்கும் வழிமுறை



மற்றும் புலத்தணிக்கை ஆகியவற்றின் மூலமாக விவரங்களை சேகரித்து கணினியில் பதிவு செய்து கொள்கை முடிவு எடுக்கும் பொருட்டு, நில நிர்வாக ஆணையர் மூலமாக அரசுக்கு அனுப்ப வேண்டும். அந்த பகுதிகளில் தடையாணை பதிவு செய்யப்பட்டுள்ள இனங்களில் அதை தளர்வு செய்வது குறித்து அரசே முடிவு செய்யும்.

ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள குடியிருப்பு ஆக்கிரமிப்புகளை கணக்கெடுப்பின் அடிப்படையில் தகுதியான நபர்களான வருவாய் நிலை ஆணை எண்.21ன் கீழ் மாவட்ட நிர்வாகம் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு வரன் முறை செய்ய வேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்புவிக்கப்பட்ட நிலங்களின் ஆட்சேபனையற்ற நிலங்களான தோப்பு, களம் போன்ற இனங்களில் உள்ள குடியிருப்பு ஆக்கிரமிப்புகளை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தீர்மானத்தை பெற்று அதன் அடிப்படையில் வரன்முறை செய்யலாம்.

கோவில் நிலங்களில் உள்ள குடியிருப்பு ஆக்கிரமிப்புகள் அதில் குடியிருப்பவர்கள் நலன் கருதி விதிமுறைகளுக்கு உட்பட்டு, தகுதியான நபர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கி வரன்முறைப்படுத்த அந்த நிலங்களை உரிய வகையில் கையகப்படுத்தி, நிலமதிப்பு நிர்ணயம் செய்வதற்கு சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை வழிகாட்டதலின்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதற்கான முன்மொழிவுகள் மாவட்ட வாரியாக நில உரிமை பெற்றுள்ள கோவில் வாரியாக அரசுக்கு அனுப்பி, அரசின் ஆணைப்பெற்று அதன் அடிப்படையில் வரன்முறைப்படுத்தவேண்டும்.

மேய்க்கால், மந்தைவெளி போன்றவையும் ஆக்கிரமிப்புகளாக இருந்தபோதிலும் ஏழைகளுக்கு வீட்டு மனை பட்டா வழங்கும் பொதுநலனை கருத்தில் கொண்டும், நீண்ட கால ஆக்கிரமிப்புகள் என்பதை கருத்தில் கொண்டும் கால்நடைத்துறையின் அனுமதி பெற்று மாவட்ட நிர்வாகம் உரிய விதிமுறைகளுக் குட்பட்டு இருந்தபோதிலும் ஏழைகளுக்கு வீட்டுமனை பட்டா வழங்கும் பொதுநலனை கருத்தில் கொண்டும், நீண்ட கால ஆக்கிரமிப்புகள் என்பதை கருத்தில் கொண்டும் கால்நடைத்துறையின் அனுமதி பெற்று மாவட்ட நிர்வாகம் உரிய விதிமுறைகளுக்குட்பட்டு முன்மொழிவுகளை அரசுக்கு அனுப்பி, அதன் அடிப்படையில் பிறப்பிக்கப்படும் அரசு ஆணையின்படி வகை மாற்றம் செய்யப்பட்டு, குடியிருப்பு ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்த வேண்டும்.

நீர்நிலைகள், கால்வாய்கள், சாலைகள் போன்ற ஆட்சேபகரமான இடங்களிலிருந்து அப்புறப்படுத்தி அதன் தன்மை மாறாமல் பாதுகாக்கும் பொருட்டு அத்தகைய குடியிருப்பு ஆக்கிரமிப்பு செய்துள்ள ஏழைகளுக்கு மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டு தகுதியான பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும். அத்தகைய தகுதியான பயனாளிகளுக்கு மாற்று புலமாக தகுதியுள்ள ஆட்சேபனையற்ற புறம் போக்கு நிலம் அதே கிராமத்தில் இல்லாத நிலையில், தனியார் பட்டாநிலங்களை வருவாய்த்துறை மூலம் கையகப்படுத்தியோ அல்லது பேச்சுவார்த்தை மூலம் விலைக்கு நிலத்தைப் பெற்றோ, மறுகுடியமர்வு செய்யும் வகையில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட வேண்டும். நிலமதிப்பு அதிகம் உள்ள நகர் சார்ந்த பகுதிகளில் தனிப்பட்டாவுக்கு மாற்றாக தமிழ் நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்டித்தர வழிவகை செய்ய வேண்டும்.

அரசு புறம்போக்குகளில் குடியிருப்பு ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தும்போதும், ஆட்சேபனையுள்ள புறம்போக்கு நிலங்களில் உள்ள குடியிருப்பு ஆக்கிரமிப்புகளுக்கு மாற்று இடம் வழங்கும்போதும் நகர்ப்புறத்திலும், கிராமப்புறத்திலும் ஆண்டு குடும்ப வருமானம் ரூ.3 லட்சம் வரை உள்ள பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா இலவசமாக வழங்க வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.3 லட்சத்துக்கு மேல் உள்ள பயனாளிகளுக்கு நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி நிலமதிப்பு வழிகாட்டி பதிவேட்டின் வழிகாட்டி பதிவேட்டின் படியான மதிப்பின் படி வசூல் செய்துகொண்டு, அதன் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட வேண்டும்.

இந்த வரன்முறை திட்டங்களில் பேரூராட்சி, நகராட்சி போன்ற நகர்ப்புற பகுதிகளில் ஆக்கிரமிப்பு விஸ்தீர்ணம் 25 சென்டுக்கு மிகாமல் இருந்துஇ போதுமான இடம் இருந்தால் குடும்பத்திற்கு தலா 2 சென்டுகளில் 3 சென்டுக்கு மிகாமலும் வீட்டுமனைப் பட்டா வழங்கலாம்.

நகர்ப்புறப் பகுதிகளில் நில மதிப்பை கருத்தில் கொண்டு ஆக்கிரமிப்பு விஸ்தீரணம் 25 சென்ட்டுக்கு கூடுதலாக இருந்தால், அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட ஏதுவாக அந்த நிலம் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு மாற்றம் செய்து அடுக்கு மாடி வீடுகள் கட்டித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டங்களின் கீழ் நிலமதிப்பு அடிப்படையில் இலவச வீட்டுமனை பட்டா வழங்குவதற்கு நிதி அதிகார வரம்பு நிர்ணயிக்கப்படுகிறது. அதாவது, வட்டாட்சியர் ரூ.1 லட்சம் வரை, வருவாய் கோட்டாட்சியர் ரூ.1 லட்சம் முதல் ரூ. இரண்டரை லட்சம் வரை, மாவட்ட ஆட்சித் தலைவர் ரூ.இரண்டரை லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை, நில நிர்வாக ஆணையர் ரூ.5 லட்சத்திற்கு மேல் என நிதி அதிகார வரம்பு நிர்ணயிக்கப்படுகிறது.

ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள குடியிருப்பு ஆக்கிரமிப்புகளை வருவாய் கோட்ட அலுவலர் தலைமையில் வட்டாட்சியர் மற்றும் வட்ட தலைமை நில அளவர் ஆகியோரைக் கொண்ட குழுவால் சரிபார்க்கப்பட்டு வரன்முறைப் படுத்தப்பட்டு பட்டா வழங்கப்பட வேண்டும்.

மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், சம்பந்தப்பட்ட கோட்டாட்சியர் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட மாவட்ட அளவிலான குழு, நில நிர்வாக ஆணையர் மற்றும் அரசு அனுமதி தேவையில்லாத இனங்களில் குடியிருப்பு ஆக்கிரமிப்பு களை வரன்முறை செய்யலாம்.

மாவட்ட அளவிலான குழுவினால் ஆக்கிரமிப்புகள் வரன்முறை செய்ய இயலாத நேர்வுகளில் சம்பந்தப்பட்ட புலத்தை மாவட்ட வருவாய் அலுவலர் சம்பந்தப்பட்ட துறை அலுவலருடன் கூட்டுத் தணிக்கை செய்து, அதன் அடிப்படையில் முன்மொழிவினை வருவாய்த்துறை முதன்மைச் செயலாளர், நில நிர்வாக ஆணையர், நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குனர் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட மாநில குழுவுக்கு அனுப்பி, உரிய விலக்களிப்பு ஆணை பெற்றபின் தகுதியுள்ள பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

தடையாணை புத்தகத்தில் பதியப்பட்டுள்ள நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை வருவாய் கோட்ட அலுவலர் அல்லது மாவட்ட வருவாய் அலுவலரால் பதியப்பட்டிருப்பின் அதனை மாவட்ட ஆட்சியரால் விலக்களிக்கப்பட்டு தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கலாம். மாவட்ட கலெக்டரால் தடையாணைப் புத்தகத்தில் பதியப்பட்டிருப்பின் மாவட்ட கலெக்டர் தலைமையில் உள்ள குழுவால் விலக்களிக்கப்பட வேண்டும். நில நிர்வாக ஆணையராலோ அல்லது அரசளவிலோ பதிவு செய்யப்பட்டிருப்பின் உரிய முன்மொழிவினை பெற்று மாநில குழுவால் விலக்களிக்கப்பட வேண்டும்.

இச்சிறப்பு வரன்முறை திட்டங்கள் ஓராண்டு காலத்திற்கு செயல்படுத்தப்பட வேண்டும். மேலும், இந்த விலக்களிப்பு அதிகாரங்கள் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தப்படும் காலத்திற்கு மட்டுமே பொருந்தும்.

இந்த அரசாணைப்படி தக்கநடவடிக்கை எடுக்கும் படியும் கணினியில் பதியப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் மாவட்ட கலெக்டர் மாதாந்திர ஆய்வு மேற்கொள்ள வேண்டும். மாவட்ட கலெக்டர் மாதாந்திர ஆய்வு அறிக்கையை நில நிர்வாக ஆணையருக்கு 5ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டும். இத்திட்டம் சிறப்பாக செயல் முறைப்படுத்தப்படுகிறதா என்பதை கூடுதல் தலைமைச் செயலாளர் அல்லது நில நிர்வாக ஆணையர் மாதம் ஒருமுறை ஆய்வு செய்ய வேண்டும். •

# எல்லை மீறும் இணையதள கருத்துப் பதிவுகள்

**முத்துமீனா, எழுத்தாளர், நாமக்கல்.**







அன்றாடம் வீட்டில் நடக்கும் நிகழ்வுகள் தொடங்கி சினிமா, சீரியல், அரசியல், அலுவலகம் என அனைத்திலும் தம்முடைய கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டு வருகிறோம். சில வருடங்களுக்கு முன்பு வரையில் தான் பார்த்த சினிமாவைப் பற்றியோ, அரசியல் தலைவர்களின் நடவடிக்கை களை பற்றியோ பகிர்வதற்கு கடிதங்கள் மூலம் குறிப்பிட்ட வர்களுக்கு சேர்த்துக் கொண்டிருந்தனர்.

தற்போதைய வளர்ந்துவிட்ட தொழில்நுட்பத்தினால் அனை வரது கையிலும், ஸ்மார்ட் போன்கள்” வந்துவிட்டன. இதன் மூலமாக பல்வேறு வலைத்தளங்களிலும், செயலிகளி லும் உடனுக் குடன் தங்களது கருத்துக்களையும் விமர்சனங் களையும் கமெண்ட்டுகளின் மூலமும், தனியான வலைத்தள பதிவாகவும், பதிவிடுகின்றனர். உதாரணத்திற்கு

யூடியூபில் ஒரு காணொலியைப் பார்த்தால் அதோடு சேர்த்து அந்தக் காணொலிக் கான பார்வையாளர் களின் கருத்துகளை கமெண்ட் செக்சனில் அனைவருக்கும் தெரியும்படி பதிவிட லாம். இதை பலர் தவறாக பயன்படுத்துகின்றனர். அதில் நடித்திருக்கும் நடிகர், நடிகைகளைப் பற்றியோ, இயக்குனரைப் பற்றியோ மிகவும் அவ தூறாகப் பதிவிட்டிருக்கும் கமெண்ட்டுகளை நம்மால் பார்க்க முடியும். இது பத்தாது என்று அப்படியான கமெண்ட்டுகளை ஆதரித்து சிலரும், எதிர்த்து சிலரும் ஒரு வருக்கொருவர் வார்த்தைக் கணைகளை வீசி தாக்கிக்கொள்வதையும் நம்மால் பார்க்க முடியும்.

இப்படியான யூடியூப் கருத்து மோதல் ஒருபுறம் இருந்தால் இன்னொருபுறம் பேஸ்புக், டுவிட்டர், இன்ஸ்டாகிராம் போன்ற வலைத்தளங்களில் வார்த்தைகளில் மூலம் ஓரிரு வார்த்தைகளில் தங்களது விருப்பையும், வெறுப்பையும் டிரண்ட் செய்வது இணையவாசிகளின் தலையாய கடமை யாகிறது. இதில் பல இளைஞர்கள் தாங்கள் செய்ய வேண்டிய வேலையை மறந்து யாரோ ஒரு முகம் தெரியாத நபருடன் கமெண்ட்டுகளின் மூலமாகவோ பேஸ்புக் மற்றும் டுவிட்டர் பதிவினாலோ தேவையற்ற கருத்து மோதலில் ஈடுபட்டு வருவதைப் பார்க்க முடிகிறது. நாட்டில் ஒரு சம்பவம் நடக்கிறது என்றால் அச்சம்பவத்தின் உண்மை நிலையை விட பொய்யான பல காணொலி பதிவுகளை யூடியூபில் நம்மால் பார்க்க முடியும். கடைசியில் உண்மையாக நடந்தது என்ன என்று தெரியாமல் மக்கள் குழப்பத் திற்கு ஆளாகின்றனர். அடிப்படை நாகரிகத்தை கட்டாயம் அனைவரும் பின்பற்ற தொடங்க வேண்டும். கருத்து சுதந்திரம் வேறு, அவதூறு வேறு என்பதை தெளிவாக உணருதல் வேண்டும். மேற்கூறிய எல்லாவற்றையும் விட நெட்டிசன்களின் தலையாய கடமை ஒன்று இருக்கிறது. அதுதான் கமெண்ட் வாசிப்போர் சங்கம்.

குறிப்பிட்ட காணொலி ஒன்று யூடியுபில் பதியப்பட்ட உடன் அதற்கு வரிசையாக பலர் கமெண்ட் செய்கின்றனர். அவற்றுள் எந்த கமெண்ட் லைக்ஸ் குவிகின்றன. இப்படி பல் வேறான அவதூறு கருத்துகளை பதிவிடுவதினால் அந்தக் கருத்தின் பின்னால் உள்ள நபர், தான் என்று யாருக்கும் தெரியாது. அதனால் வாய்க்கு வந்ததை யெல்லாம் பலரும் பதிவிட்டு வருகின்றனர். இச்செய லானது மிகவும் இழிவானது என்பதை புரிந்து நடக்க வேண்டும். இப்படி செய்வதினால் தனிமனித ஒழுக்கத்தையும், ஓய்வு நேரத்தையும் வீண் அடிக் கிறார்களே தவிர, உருப்படியான காரியத்தை செய்வதில்லை. இணையம் என்பது ஒரு கடல். அதில் தனக்குத் தேவை இதுதான் என்பதை தெளிவாக உணர்ந்து பொழுதுபோக்காக மட்டுமே கருதி குறைவான நேரத்தை செலவிட வேண்டும். உதாரணத்திற்கு ஒரு காணொலியை பார்க்க நேர்ந்தால் அதன் பின்னால் அதற்கு சம்பந்தமாக பத்துக்கும் மேற்பட்டவைகளை அறியாமலேயே, நேரம் போவது தெரியாமலேயே, பார்க்க நேரிடுகிறது.

மனதை ஒருநிலைப்படுத்த கற்றுக்கொள்ள வேண்டும். ஆயிரக்கணக்கில் காணொலி தேர்வுகள் இருந்தாலும் அந்த வலையில் சிக்கிக்கொள்ளாமல் சாதுரியமாக தொழில்நுட்பத்தை கையாள வேண்டும். எல்லோரும் அவதூறாக பதிவிடுகிறார்கள் என்று பலரும் அவ்வழி தவறானது என்பதை அறியாமல் சென்று கொண்டிருக்கின்றனர். சரியான நோக்கம் எது என்பதை அறிந்து தவறான செய்கைகளை உண்டாக்கும் சிந்தனையை முற்றிலும் தவிர்த்து மனிதாபிமானத்தோடு செயல்பட வேண்டும். பொழுது போக்கு என்று ஆரம்பித்து பார்க்கத் தொடங்கும் காணொலிகளினால் குழப்பங்கள் தான் பெருகிக் கொண்டு இருக்கிறதே தவிர, அதனால் நன்மை என்பது மிகக் குறைவாகவே உள்ளது. ஆனால் இடை விடாது நாம் பார்க்கும் காணொலிகளினால் அதை பதிவேற்றம் செய்த நபர்களுக்கு, பார்வைய ாளர்களைப் பொருத்து அவர்களது அக்கவுண்ட்டில் பணம் ஏறிக்கொண்டே போகும்.

இதன்மூலம் ஒரு விஷயத்தை அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் பொழுது போக்குக்காக அதிக நேரத்தை வீணடிக்கும் அதேவேளையில் பலர் அதன் மூலம் சம்பாதித்துக் கொண்டே இருக்கிறார்கள். ஒரு காணொலியின் நேரம் 20 நிமிடம் என்று எடுத்துக்கொண்டால் ஒரு மனிதன் அந்த காணொலியை பார்த்த நேரத்தையும் தாண்டி அதற்கு வந்திருக்கும் கமெண்ட்டுகளை படித்து, தன்னுடைய கருத்தை பதிவிட்டு முடிப்பதற்கு மேலும் பத்துநிமிடம் தேவைப்படுகிறது. அந்த நேரத்தில் தாமும் இது போன்ற வகையிலே ஆக்கபூர்வமான பயனளிக்கக்கூடிய ஏதாவது பொழுதுபோக்கை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்று நினைப்பது தான் சீரிய சிந்தனையாகும். மற்றவர்களைப் பற்றி இழிவாக பேசுவதற்கு தனக்கு எந்த அதிகாரமும், உரிமையும் இல்லை என்ற உண்மையை புரிந்து கொள்ளுதல் வேண்டும். ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்ற வள்ளுவர் வாக்கை நினைவில் கொள்ளுதல் வேண்டும். எந்த ஒரு செயலாக இருந்தாலும் அதில் நிதானம் என்பது அவசியம் இருக்க வேண்டும். அன்றாடம் நாம் செய்யும் சிறு சிறு வேலைகள் தொடங்கி வாழ்க்கையில் பெரிய முடிவுகளை எடுப்பது வரை பொறுமை மிகவும் அவசியம். இத்தகைய பொறுமை இல்லாததால் தான் எல்லோரும் செய்கிறார்கள் என்று சரியான வழியை மறந்து இணையக் கடலில் மூழ்கி தன்நிலை மறந்து சிக்கிக்கொள்கின்றனர். நவீனகால தொழில் நுட்பத்தில் ஆழ்ந்து, தனிமனித ஒழுக்கத்தை தொலைக்காமலும், அடிப்படை நாகரிகத்தை பின்பற்றாமலும் இருக்காமல் நேர்பட சிந்தித்து, ஆக்கபூர்வமான பாதையில் செல்வோமாக.

●

Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**

# பெ.மணியரசன் எழுதிய



பன்மை வெளி

## புதிய வெளியீடு

**சூ**ழ்ந்துள்ள துயரங்களைத்
தொகுத்தால் போதாது!
தூக்கி எறியும் வழிசொல்ல வேண்டும்!

வாக்குச் சாவடிக்கு வாருங்கள்
வழிகாண்போம் என்பது
வஞ்சித்து விட்ட பழைய பாதை!

வரலாற்றை உருவாக்கும் ஆற்றல்
மக்கள் எழுச்சிக்கே உண்டு!

சிந்திக்கத் தெரிந்தவர்கள்
செயல்பட அஞ்சுகிறார்கள்
சாகசங்கள் செய்து யாராவது
சாதிக்க மாட்டார்களா
என்று ஏங்குகிறார்கள்!

கருத்தரித்த தாய்தான் பெற்றாக வேண்டும்
கருத்தைச் சுமந்தவர்கள்தாம்
களத்திற்கு வரவேண்டும்
இதோ உங்களுக்கான கைவாள்!

**சிந்திக்கத் துணிக!**
**செயற்களம் வருக!**

– பெ. மணியரசன்

**விலை**
**ரூ 60/-**




பக்கம் – 88
(படங்களுடன்)

**தொடர்புக்கு: 044 24742911 / 98408 48594 / 94439 18095**

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

